# சுபீட்சம்

SUPEEDSAM — EVERYTHING FOR PEOPLE — அனைத்து விடயங்களும் மக்களுக்காகவே

நிகழ்நிலை பத்திரிகை; அனைத்து விடயங்களும் மக்களுக்காகவே

வெள்ளிக்கிழமை 24.09.2021 | supeedsam.com | supeedsam@gmail.com







# அம்பாறை கரங்க வட்டையில் மோதும் சிங்கள- முஸ்லிம் விவசாயிகள்



## ஜனாதிபதியை தலையிட கோரிக்கை!

(நூருல் ஹுதா உமர்)

அம்பாறை சம்மாந்துறை பிரதேச எல்லையில் அமைந்துள்ள வளத்தாப்பிட்டியில் உள்ள முஸ்லிங்களின் பூர்வீகக் காணியான கரங்க வட்டை தற்போது சிங்களவர்களால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளது.1943 ஆம் ஆண்டியிலிருந்து இந்தக் காணியில் முஸ்லிம்கள் விவசாயச் செய்கையில் ஈடுபட்டிருந்தனர்.

02 ஆம் பக்கத்தில்...

# கஜேந்திரன் கைது செய்யப்பட்டு பிணையில் விடுவிப்பு



(யாழ்.கீதன்)

தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன் கைது செய்யப்பட்டு பொலிஸ் பிணையில் விடுவிக்கப் பட்டார்.

நல்லூர் பின் வீதியில் அமைந்துள்ள தியாக தீபம் திலீபனின் நினைவிடத்தில் அஞ்சலி செலுத்த முற்பட்ட நிலையிலையே அவர்கள் கைது செய்யப்பட்டு

02 ஆம் பக்கத்தில்...

## கஜேந்திரன் கைதுக்கு கூட்டமைப்பு கண்டனம்

(ராஜ்)

யாழ்.நல்லூரில் தியாக தீபம் திலீபனை நினைவேந்திய தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன், பொலிஸாரால் கைது செய்யப்பட்டமையைத்

02 ஆம் பக்கத்தில்...

## மற்றொரு உச்சத்தை இலங்கை எதிர்கொள்ளும்

### சுகாதார அதிகாரிகள் எச்சரிப்பு

ஏனைய நாடுகளில் இருக்கும் கடுமையான பிறழ்வுகளால் எதிர்வரும் வாரங்கள் அல்லது மாதங்களில் மற்றொரு உச்சத்தை எதிர்பார்க்கலாம் என்று சுகாதார அதிகாரிகள் எச்சரித்துள்ளனர்.

இலங்கை ரஜரட்ட பல்கலைக்கழக, சமூக மருத்துவப் பேராசிரியர் சுனத் அகம்பொடி கொழும்பின் ஊடகம் ஒன்றிடம் இதனைத் தெரிவித்துள்ளார்.

02 ஆம் பக்கத்தில்...

# ஜனாதிபதியின் அழைப்பை நம்பத் தயாரில்லை



(ராஜ்)

இலங்கையில் தமிழ்த் தேசியப் பிரச்சினைக்குத் தீர்வு காண வேண்டுமெனின், முதலில் உள்ள உள்நாட்டில் உள்ள தமிழ் மக்களின் பிரதிநிதிகளுடன் பேச்சுவார்த்தை நடத்த வேண்டும் என

02 ஆம் பக்கத்தில்...

# மகனின் விடுதலைக்காக நாமலிடம் கண்ணீர் விட்டு அழுத தாய்



(மட்டக்களப்பு விசேட நிருபர்)

பயங்கரவாத தடைச்சட்டத்தில் கைது செய்யப்பட்டு தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ள தனது மகனை விடுதலை செய்யுமாறு கோரியும், உடனடியாக இதற்கு தீர்வு ஒன்றை சொல்லிவிட்டு

02 ஆம் பக்கத்தில்...

# மோட்டார் சைக்கிளை வேகமாக ஓட வேண்டாமென கூறிய இளைஞன் மீது வாள்வெட்டு

### கல்முனை மத்ரஸா வீதியில் சம்பவம்

கல்முனை,மத்ரஸா வீதியில் இடம்பெற்ற சரமாரியான வாள் வெட்டில் படுகாயமடைந்த இளைஞர் ஒருவர் கல்முனை அஸ்ரப் ஞாபகார்த்த வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

புதன்கிழமை காலை இந்த இளைஞன் தன்னுடைய வீட்டுக்கு முன்னால் வேகமாக மோட்டார் சைக்கிளை ஓட்டிச் சென்றவர்களை நிறுத்தி

02 ஆம் பக்கத்தில்...



நூருல் ஹுதா உமர்

# அரசியல் கைதிகள் அனைவரும் விரைவில் விடுதலை; நாமல் உறுதி



(செங்கலடி நிருபர் பே.சபேஷ்)

தடுத்துவைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகள் அனைவரையும் விடுதலை செய்ய ஜனாதிபதி கோட்டபாய ராஜபக்ஷ விரைவாக நடவடிக்கையெடுத்து வருவதாக இளைஞர் விவகார விளையாட்டுத்துறை அமைச்சர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

02 ஆம் பக்கத்தில்...

# கோரோனாவைக்காட்டி 2 மாதங்களாக மாநகரசபை அமர்வு இழுத்தடிப்பு!

### 05 மாதங்கள் கூட்டமில்லை



(வி.ரி.சகாதேவராஜா)

நாட்டில் நிலவும் கொரோனாவைக் காரணம்காட்டி கடந்த இரண்டு மாதங்களாக, கல்முனை மாநகரசபை அமர்வுகள் நடாத்தப்படாமல் தொடர்ச்சியாக

02 ஆம் பக்கத்தில்...

# இளைஞர்களிடம் கட்சியை ஒப்படைத்து விட்டு வீட்டுக்கு செல்லுங்கள்: சந்திரிக்கா அறைகூவல்



அதிகார ஆசைப்பிடித்த தலைவர்களுக்கு கௌரவம் இருந்தால், தமது பதவிகளில் இருந்து விலகி, ஊழல், மோசடியற்ற, கட்சியை உண்மையாக நேரிக்கும் கொள்கை பற்றுக்கொண்ட இளைஞர்களிடம் ஸ்ரீலங்கா

02 ஆம் பக்கத்தில்...






# கட்டுக்கதைகளுக்கு இரையாகாமல் பிள்ளைகளுக்கு தடுப்பூசி ஏற்றுவதில் பின்வாங்காதீர்கள்

### பெற்றோரிடம் வைத்திய நிபுணர்கள் கோரிக்கை

02 ஆம் பக்கத்தில்...










## கட்டுக்கதைகளுக்கு இரையாகாமல்

கட்டுக்கதைகளுக்கு இரையாகாமல், தமது பிள்ளைகளுக்குத் தடுப்பூசி ஏற்றும் விடயத்தில் பின்வாங்காது செயற்படுமாறு, பெற்றோர்கள் மற்றும் பாதுகாவலர்களிடம், விசேட வைத்திய நிபுணர்கள் கோரிக்கை விடுத்தனர்.

விசேட வைத்திய நிபுணர்களின் பரிந்துரைகளுக்கமையவே, உலகிலும் எமது நாட்டிலும், தடுப்பூசி ஏற்றல் வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றன என்றும் அதனால், அந்த விடயத்தில் வீண் அச்சங்கொள்ளத் தேவையில்லை என்றும் சுட்டிக்காட்டிய அவர்கள், சரியான புரிதலுடனும் அக்கறையுடனும், வெற்றிகரமான பயனை அடைந்துகொள்ளுமாறும் தெரிவித்தனர்.

ஜனாதிபதி ஊடக மையத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட ஊடகச் சந்திப்பு, வீடியோ தொழில்நுட்பத்தின் ஊடாக இடம்பெற்றது. இதன்போது, சிறுவர் நோயியல் விசேட வைத்திய நிபுணர்கள் உள்ளிட்ட குழுவொன்று இதில் கலந்துகொண்டு, சிறுவர்களுக்கான தடுப்பூசி ஏற்றல் தொடர்பில் கருத்துரைத்தது.

கொழும்பு ரிஜ்வே சிறுவர் வைத்தியசாலையில், நாளை (24) முதல், நாள்பட்ட நோய்களையுடைய சிறுவர்களுக்கான தடுப்பூசி ஏற்றும் பணிகள் ஆரம்பிக்கவுள்ளன என்று தெரிவித்த சிறுவர் நோயியல் தொடர்பான விசேட வைத்திய நிபுணர் அநுருத்த பாதெனிய, அறிவாற்றல் குறைந்த, நீரிழிவு, நரம்பியல் நோய்கள், சிறுநீரகப் பாதிப்பு, இதய நோய், தலசீமியா, சிறுநீர் மற்றும் உணவுக்குழாய்ப் பாதிப்புகள் உள்ளிட்ட நாள்பட்ட நோய்களால் பாதிக்கப்பட்டுள்ள சிறுவர்களை, இந்தத் தடுப்பூசி ஏற்றலுக்காக அழைத்து வருமாறு, பெற்றோருக்கு அழைப்பு விடுத்தார்.

குறித்த சிறுவர்களுக்கான சிகிச்சைகள் வழங்கப்படும் சிகிச்சையகங்களுக்கு (க்ளினிக்) வருகை தருவதால், அங்குள்ள விசேட வைத்திய நிபுணரின் பரிந்துரைக்கமைய, பெற்றோரின் அனுமதியுடன், அந்தச் சிறுவர்களுக்கான தடுப்பூசிகளை ஏற்றுவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன என்றும், டொக்டர் பாதெனிய குறிப்பிட்டார்.

## கஜேந்திரன் கைது செய்யப்பட்டு பிணையில்

பொலிஸ் நிலையத்திற்கு அழைத்து செல்லப்பட்டு வாக்கு மூலங்கள் பெறப்பட்டுள்ளன.

இந்த நிலையில், அவர்களை பொலிஸ் பிணையில் விடுவித்த யாழ். பொலிஸார், அவர்களுக்கு எதிராக எதிர்வரும் 2%ஆம் திகதி நீதிமன்றில் வழக்கு தாக்கல் செய்யவுள்ளதாக அறிவித்துள்ளனர்.

நல்லூர் பின் வீதியில் அமைந்துள்ள தியாக தீபம் திலீபனின் நினைவிடத்தில் அஞ்சலி நிகழ்வு நடத்தும் நபர்களை கைது செய்யும் நோக்குடன் நேற்று வியாழக்கிழமை முதல் பொலிஸார் கடமைக்கு அமர்த்தப்பட்டுள்ளனர். இந்நிலையில் தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன் உள்ளிட்டவர்கள் அஞ்சலி செலுத்த சென்ற போது , அதற்கு பொலிஸார் தடை விதித்தனர்.

நீதிமன்ற தடையுத்தரவு இன்றி என்னை தடுக்க முடியாது என கூறி நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன் தடைகளை மீறி அஞ்சலி செலுத்த முற்பட்ட வேளை அவரையும் அவருடன் சென்றவர்களையும் கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்களை யாழ்ப்பாண பொலிஸ் நிலையத்திற்கு கொண்டு சென்று வாக்கு மூலம் பெற்ற பின்னரே பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

அதே வேளை யாழ்.நீதவான் நீதிமன்ற நியாயாதிக்க எல்லைக்குள் தியாக தீபம் திலீபனின் நினைவேந்தல் நிகழ்வுகளை முன்னெடுக்க யாழ்ப்பாண பொலிஸார் நேற்று வியாழக்கிழமை நீதிமன்ற தடையுத்தரவை பெற்றுள்ளனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## இளைஞர்களிடம் கட்சியை ஒப்படைத்து

சுதந்திரக் கட்சியை ஒப்படைக்க வேண்டும் என முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்க தெரிவித்துள்ளார்.

அதிகார ஆசைப்பிடித்த, தூரநோக்கமற்ற தலைவர்களால் எப்போதும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி மீண்டும் கட்டியெழுப்ப முடியாது.

இப்படியானவர்களுடன் வேலை செய்து நேரத்தை வீணடிக்க தயாரில்லை எனவும் முன்னாள் ஜனாதிபதி கூறியுள்ளார்.

அதேவேளை தனது உத்தியோபூர்வ முகநூல் பக்கத்தில் பதிவு ஒன்றை இட்டுள்ள முன்னாள் ஜனாதிபதி மேலும் தெரிவிக்கையில், ஊடகவியலாளர் ஒருவர் அண்மையில் என்னிடம் கேள்வி ஒன்றை கேட்டார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவர்கள் உங்களை மீண்டும் கட்சிக்கு அழைக்க தயாராகி வருவதாக தகவல் கிடைத்துள்ளது. இது குறித்து உங்கள் கருத்தென்ன என கேட்டிருந்தார். எமது கட்சியின் தலைவர் முற்றிலும் அதிகார ஆசை காரணமாக அப்போது மொட்டுக் கட்சியுடன் இணைந்தனர். அவர்களுக்கு கட்சி மீது பற்றில்லை. தூர நோக்கிய பார்வையும் இல்லை.

முற்றிலும் அதிகார பேராசையே இருக்கின்றது. இந்த அரசாங்கம் செய்யும் அனைத்து தவறுகளிலும் அவர்களும் பங்காளிகள். அவர்களால் அதில் இருந்து விடுப்பட முடியாது என சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்க கூறியுள்ளார்.

## மகனின் விடுதலைக்காக நாமலிடம் கண்ணீர்

போகுமாறும் தாயொருவர் கண்ணீர்விட்டு அழுத சம்பவம் மட்டக்களப்பில் இடம்பெற்றுள்ளது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட பல அபிவிருத்தி திட்டங்களை மக்கள் பாவனைக்காக கையளிப்பதற்கும், மேற்கொள்ளப்படவுள்ள மேலும் பல அபிவிருத்தி திட்டங்கள் தொடர்பில் ஆராய்வதற்காகவும் மட்டக்களப்பிற்கு வருகைதந்துள்ள அமைச்சர் நாமல் ராஜபக்ஷ அவர்களிடமே சிறையில் அடைக்கப்பட்டுள்ள தனது மகனை விடுவிக்குமாறு குறித்த தாய் கோரிக்கை விடுத்துள்ளார்.

நேற்று வந்தாறுமூலையில் இடம்பெற்ற ஒரு நிகழ்வின் போதே நாமல் ராஜபக்ஷ அவர்களுக்கு மாலை அணிவித்து தனது மகனுக்காண தீர்வினை இவ்விடத்திலே பெற்றுத்தந்துவிட்டுப் போகுமாறு அவர் கண்ணீருடன் கேட்டுக்கொண்டமை குறிப்பிடத்தக்கது.




## கொரோனாவைக்காட்டி 2 மாதங்களாக மாநகரசபை அமர்வு

இழுத்தடிக்கப்பட்டுவருவதாக அங்குள்ள மாநகரசபை உறுப்பினர்கள் கடும் விசனத்தை தெரிவித்துவருகின்றார்கள்.

இதுவரை கொரோனாவைக்காரணம்காட்டி 5தடவைகள் 5மாதங்கள் மாதாந்த அமர்வுகள் ரத்துச் செய்யப்பட்டிருக்கின்றன. கடந்தாண்டில் டிசம்பர் மாதத்திலும் ,இவ்வாண்டில் மே, யூன், ஆகஸ்ட் ,செப்ரம்பர் ஆகிய மாதங்களில் கூட்டம் நடைபெறவில்லை.

செப்ரம்பர்மாதத்திற்கான அமர்வு இறுதியாக நேற்றுமுன்தினம்(22) புதன்கிழமை பிற்கல் 2.30 மணியளவில் இடம்பெறவிருந்தது. உறுப்பினர்கள் வருகை தந்திருந்தும், இறுதிநேரத்தில் கூட்டம் நடைபெறாது என செயலாளர் அறிவித்தார். அதனால் இந்த மாதத்திற்கான கூட்டமும் நடைபெறவில்லை.

இறுதியாக ,கடந்த ஜூலை மாதம் மாதாந்த கூட்டம் இடம்பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

ஆனால், கடந்த இரண்டு மாதங்களாக தொடர்ச்சியாக கூட்டங்கள் நடைபெறாத போதிலும் மேயர் மற்றும் உறுப்பினர்களுக்கான மாதாந்த கொடுப்பனவு வழங்கப்பட்டிருக்கிறது என்பது இங்கு சுட்டிக்காட்டத்ததக்கது. கூட்டங்களுக்கு வந்ததாக ஒப்பமிட்டதால் கொடுப்பனவு வழங்கப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

தமிழத்தேசியக்கூட்டமைப்பின் கல்முனை நகரத்திற்கான உறுப்பினர் சந்திரசேகரம் ராஜன் கூறுகையில்:

கடந்த பலமாதங்களாக கூட்டத்திற்கான கடிதங்கள் வருகின்றன. சபைக்கு வந்தால் கூட்டம் ரத்துச்செய்யப்பட்டுள்ளதாக செயலாளர் அறிவிக்கின்றார்.நாங்கள் பலத்த வேலைப் பழுக்களுக்கு மத்தியில் கூட்டத்திற்காக வந்தால் இப்படி நடப்பது ஏமாற்றமே.

நாட்டில் ஏனைய உள்ளூராட்சிசபைகள் கூட்டங்களை நடாத்தும்போது கல்முனை மாநகரசபைக்கு மட்டும் ஏனிந்த கொரோனாச் சாட்டு?

225பேரைக்கொண்ட பாராளுமன்றம்கூட கூட்டப்படுகிறது. நாட்டிலுள்ள அத்தனை சபைகளிலும் மாதாந்த கூட்டம் நடைபெற்று வருகிறது.ஏன் இங்கு கூட வேறு கூட்டங்கள் நடைபெற்றிருக்கின்றன. ஆனால் மாதாந்த அமர்வு என்றால் மட்டும் கொரோனா வருகிறது.

மேயர் தொடர்ச்சியாக இவ்வாறு கூட்டங்களை இழுத்தடித்துவருவது நல்லதல்ல. இது எம்மைத்தெரிந்த மக்களது உரிமையை மீறுகின்ற செயலாககருதலாம்.முன்னறிவித்தலின்றி இவ்வாறு கூட்டம் ரத்துச்செய்யப்படுகின்றமை தான்தோன்றித்தனமான செயலாகும்.

கொரோனா காலகட்டத்தில் மக்களுக்கு செய்யவேண்டிய அத்தியாவசிய சேவை சேவை எவ்வளவோ இருக்கிறது. ஏனைய சபைகள் பலவிதமான சேவைகளை செய்துவருகின்றன.கொரோனாவுக்கென விசேடசேவைகளை மாத்தளை மாநகரசபை போன்ற பல சபைகள் முன்னுதாரணமாக செய்துவருகின்றன. ஆனால் நாம் எதுவுமே செய்யாமல் வாழாவிருக்கிறோம். இதற்காகவா மக்கள் எங்களைத் தெரிந்தார்கள்?

சபையில் வருமானம் இல்லையென்றால் சபையைக்கூட்டி வருமானம்வரும் மார்க்கங்களை உறுப்பினர்களிடமிருந்து கேட்டறிய வேண்டும்.

உடனடியாக கூட்டம் நடாத்தப்பட வேண்டும். மக்களது பிரச்சினைகள் ஆராயப்படவேண்டும் .தேவைகள் பூர்த்திசெய்யப்பட வேண்டும். என்றார்.

அங்கு உறுப்பினர்களான க.சிவலிங்கம் எம்.ஐ.எம்.மனாப் உள்ளிட்ட பலரும் கருத்துரைத்தனர்.

## கஜேந்திரன் கைதுக்கு கூட்டமைப்பு

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வன்மையாகக் கண்டிக்கின்றது என அதன் பேச்சாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

நினைவேந்தலைத் தடை செய்ய முடியாது. அதேபோன்று நினைவேந்தலுக்கு நீதிமன்றத்தினூடாகத் தடைகளும் விதிக்க முடியாது. எந்தவொரு அத்துமீறலும் இன்றி, மக்கள் கூட்டம் இன்றி, கொரோனா பாதுகாப்பு மீறல் இன்றி ஓர் மக்கள் பிரதிநிதி மேற்கொண்ட நினைவேந்தலை பொலிஸார் கையாண்ட விதம் மிகவும் பாரதூரமானது.

கஜேந்திரன் ஒரு நாடாளுமன்ற உறுப்பினர் என்று தெரிந்தும் ஒரு சாதாரண மனிதனுக்கு வழங்க வேண்டிய கௌரவத்தையேனும் வழங்காது அவரை இழுத்துச் சென்று வாகனத்தில் ஏற்றி குற்றவாளியைக் கொண்டு செல்வது போன்று பொலிஸார் கொண்டு சென்றனர். இதனைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மிகவும் வன்மையாகக் கண்டிக்கின்றது என்றும் தெரிவித்துள்ளார்.

## ஜனாதிபதியின் அழைப்பை நம்பத் தயாரில்லை

தெரிவித்துள்ள தமிழ் தேசிய கூட்டமைப்பு, அதனைவிடுத்து புலம்பெயர் மக்களுடனான பேச்சுக்கு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ச அழைப்பு விடுத்துள்ளமை தொடர்பில் நம்பிக்கைக்கொள்ள முடியாது என கூறியுள்ளது.

உள்ளூர் தமிழர்களை ஏமாற்றிய ஜனாதிபதி இன்று சர்வதேசத்தை ஏமாற்ற முடியுமென நம்பி செயற்படுவதாக கூட்டமைப்பின் பேச்சாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரன், தெரிவித்துள்ளார்.

அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியப் பிரதிநிதிகளுடன் கொழும்பில் உள்ள தனது இல்லத்தில் தமிழ் தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் பேச்சு நடத்தியுள்ளார். இதன்பின்னர் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கருத்து வெளியிட்ட எம்.ஏ.சுமந்திரன்,

புலம்பெயர் தமிழர்களை பேச்சுக்கு அழைக்கும் ஜனாதிபதியின் கருத்து குறித்து சந்தேகத்தை வெளியிட்டார். ஐக்கிய நாடுகள் சபையுடன் இணைந்து பணியாற்றத் தயார் என ஜனாதிபதி ட்விட்டர் ஊடாக தெரிவித்திருந்தார்.

அதன் பின்னர் மனித உரிமைகள் ஆணையாளர் அறிக்கை ஒன்றை வெளியிட்டதும் வெளிவிவகார அமைச்சர் அதனை நிராகரிப்பதாகவும், வெளியாரின் தலையீட்டை விரும்பவில்லை எனவும் குறிப்பிட்டுள்ளார்.

ஆகவே ஜனாதிபதி இணைந்து பணியாற்ற விரும்புவதாக தெரிவிக்கையில், வெளிவிவகார அமைச்சர் வேறு வகையில் கருத்து வெளியிடுகின்றார். அதனைவிட புலம்பெயர் அமைப்புகளுடன் பேச்சு நடத்த தயார் என தெரிவிக்கின்றார். அதற்கு நாம் எதிர்ப்பை வெளியிடவில்லை.

தமிழ்த் தேசியப் பிரச்சினைக்கு தீர்வு காண வேண்டுமெனின், இங்குள்ள தமிழ் பிரதிநிதிகளுடனேயே பேச்சுவார்த்தை நடத்த வேண்டும். வெளிநாட்டவர் தொடர்பில் பேசுகின்றனர். சுயநிர்ணயம் தொடர்பில் பேசுகின்றனர்.

எனினும் நாட்டிலுள்ளவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தாமல் புலம்பெயர் தமிழர்களுடன் பேச்சுவார்த்தை நடத்த வேண்டுமென ஜனாதிபதியே கூறுகின்றார். அவரது கருத்துக்களை நாம் நம்பவில்லை. எங்களை ஏமாற்றிவிட்டு, இன்று சர்வதேசத்தை ஏமாற்ற முடியுமென நம்பி செயற்படுகின்றனர்.

## மோட்டார் சைக்கிளை வேகமாக ஓட வேண்டாமென கூறிய

வேகமாக வாகனத்தை ஒட்டவேண்டாம் என்று கூறியபோது வாய்த்தர்க்கத்தில் ஈடுபட்ட மோட்டார் சைக்கிளில் வந்த இளைஞர்கள் அங்கிருந்து சென்று விட்டு பின்னர் இரு வாள்களுடன் வந்து சரமாரியாக வெட்டியதிலேயே படுகாயமடைந்த இந்த இளைஞனான முஹம்மத் ஸபான் என்பவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதாக காயமடைந்தவரின் தந்தை தெரிவித்தார்.

வீட்டில் உறங்கிக் கொண்டிருந்த எனது தம்பி சத்தம் கேட்டு வெளியே வந்தபோது மிக நீளமான வாள்களால் வெட்டப்பட்டார்.இது தொடர்பில் கல்முனை பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளோம்.எனது தம்பியை தாக்கியவர்களை எங்களுக்கு நன்றாக தெரியும்.

எங்களின் பிரதேசத்தில் யாரிடம் விசாரித்தாலும் அவர்களின் கொடுமைகளை விளக்குவார்கள் என காயமடைந்த இளைஞனின் சகோதரி தெரிவித்தார்.

வீட்டு வாயில் கதவு, கதவு போன்றவற்றிலும் வாள் வெட்டுத்தடயங்கள் உள்ளதையும் காண முடிந்தது.இது தொடர்பிலான மேலதிக விசாரணையை கல்முனை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## அரசியல் கைதிகள் அனைவரும் விரைவில் விடுதலை; நாமல் உறுதி

மட்டக்களப்பு மாவட்டத்தில் ராஜபக்ஷ குடும்ப பெயர்களைப் பயன்படுத்தி சட்ட விரோத மணல் அகழ்வு நடைபெறுவதாக தகவல் கிடைத்துள்ளது எந்தவொரு நிலையிலும் சட்டவிரோத நடவடிக்கைகளுக்கு எமது அரசாங்கம் ஆதரவளிக்கப் போவதில்லை என்றும் அவர் கூறினார்.

கிராமிய விளையாட்டு மைதானங்களை மேம்படுத்தும் தேசிய வேலைத்திட்டத்தின் கீழ் 15 இலட்சம் ரூபா நிதியில் புனரமைக்கப்பட்ட மட்டக்களப்பு வந்தாறுமூலை டயமன் விளையாட்டுக்கழக மைதானம் கையளிக்கும் நிகழ்வு வியாழக்கிழமை நடைபெற்றது. இந்நிகழ்வில் கலந்துகொண்டு ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிட்டார். மட்டக்களப்பு ஏறாவூர்ப்பற்று பிரதேச செயலாளர் சு.ராஜ்பாபு தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் இராஜாங்க அமைச்சரகளான் சதாசிவம் வியாழேந்திரன், தேனுக விதானகே, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் பாராளுமன்ற உறுப்பினர் நஸீர் அகமட், அரசாங்க அதிபர் எஸ்.கருணாகரன், மேலதிக அரசாங்க அதிபர் திருமதி நவரூபரஞ்சனி முகுந்தன் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

அவர் தொடர்ந்து தெரிவிகையில் - எமது அரசாங்கத்திற்கு தேவையற்றவிதத்தில் இளைஞர்களை கைதுசெய்து தடுத்துவைக்கப்படவேண்டிய அவசியமில்லை. தேரியாமல் செய்த குற்றங்களுக்காக கைதுசெய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களை விரைவில் விடுதலை செய்ய நடவடிக்கையெடுக்கப்படும். இளைஞர்கள் நாட்டின் பெறுமதிளான சொத்துக்கள். தமிழ் அரசியல் கைதிகளை விடுதலை செய்வோம் எனக்கூறி ஆட்சிக்கு வந்த நல்லாட்சி அரசாங்கத்தால் அதிகமான விடங்களைச் செய்ய முடியவில்லை. ஆரசியல் கைதிகள் விடுதலை தொடர்பில் பல விடங்களைப் பின்பற்ற வேண்டும்.

ஜனாதிபதி கோட்டபாய ராஜபக்ஷ அரசியல் கைதிகள் விடுதலை தொடர்பில் பல நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளார். அதனடிப்படையில் இதுவரை 16 பேர் விடுதலை செய்யப்பட்டுள்ளனர். எஞ்சியுள்ள கைதிகளை விடுதலை செய்ய நடவடிக்கையெடுக்கப்படும்.

முகநூலில் புகைப்படங்களை பதிவிட்ட குற்றங்களுக்காக பலர் கைதுசெய்யப்பட்டுள்ளனர். இதுகுறித்து நீதித்துறையுடன் பேசி முயற்சிகள் முன்னெடுக்கப்படும். குறித்த கைதிகளுக்கு புனர்வாழ்வளிக்கப்பட்டு சமூகத்துடன இணைக்க நடவடிக்கையெடுக்கப்படும். எதிர்க்கட்சியைச் சேர்ந்த பலர் சட்டவிரோத மணல் அகழ்விற்கு எமது அரசாங்கத்தினைக் குற்றம் சுமத்துகிறார்கள். இந்த விடயம் தொடர்பில் பாராளுமன்றத்தில் கூச்சலிடுவதானாலோ ஊடகவியலாளர் மநாடுகள் நடத்துவதாலோ எவ்வித பயனும் கிடைக்கப்போவதில்லை.

சுட்டவிரோத நடவடிக்கை தொடர்பில் தெரியவந்தால் பொலிஸாரிடம் முறைப்பாடு செய்யுங்கள் அவ்வாறான நிலையில் சாட்சியமளிக்க நாங்களும் வருகிறோம். எமக்கு எதிராக கூச்சலிடுவது பொலிஸாரின் புத்தகங்களில் பதியப்படுவதில்லை. சட்டரீதியன நடவடிக்கைகளுக்கு பொதுமக்கள் முனவர வேண்டும் என்றார்.

## மற்றொரு உச்சத்தை இலங்கை எதிர்கொள்ளும்

அவர் மேலும் தெரிவிக்கையில்,

டெல்டா மாறுபாட்டின் உச்சம் இப்போது இலங்கையில் முடிந்துவிட்டது.எதிர்வரும் வாரங்களில் மற்றொரு கோவிட் உச்சம் ஏற்பட 60% வாய்ப்பு உள்ளது.

அத்துடன் இறப்பு மற்றும் பாதிக்கப்பட்ட நோயாளிகளின் எண்ணிக்கையும் குறைந்துள்ளது. ஆனால் ஏனைய நாடுகளில் இருக்கும் கடுமையான பிறழ்வுகளால் எதிர்வரும் வாரங்கள் அல்லது மாதங்களில் மற்றொரு உச்சத்தை எதிர்பார்க்கலாம்.

தற்போதைய தனிமைப்படுத்தப்பட்ட ஊரடங்கு உத்தரவின் காரணமாக பொது நடமாட்டம் கடுமையாகக் குறைந்த நிலையில் நாட்டில் இறப்புகள் மற்றும் நோயாளிகளின் எண்ணிக்கை கடுமையாகக் குறைந்து வருகிறது. திருமணங்கள் நடத்தப்படாதது மற்றும் கூட்டமான பொது போக்குவரத்து இயங்காதது போன்ற காரணங்களால். இலங்கையில் மிகவும் தொற்றக்கூடிய டெல்டா வகையின் உச்சம் முடிந்துவிட்டதாகச் சுகாதார அதிகாரிகள் நம்புகின்றனர். எனினும் வரும் வாரங்களில் அதிகரிக்கலாம்.

அதேநேரம் முற்றிலும் தடுப்பூசி போடப்பட்ட மக்களிடையே கூட, பரவல் பரிமாற்ற வீதத்தைக் காணமுடிகிறது என்பது ஆபத்தானது. உலகளாவிய நிலையில், தடுப்பூசிகள் கடுமையான நோய் மற்றும் இறப்பைத் தடுக்கின்றன என்று தெளிவாகக் கூறப்பட்டுள்ளது.

எனினும் கோவிட் பரவுவதை அது குறைக்காது என்றும் இலங்கை ரஜரட்ட பல்கலைக்கழக, சமூக மருத்துவப் பேராசிரியர் சுனத் அகம்பொடி தெரிவித்துள்ளார்.

## அம்பாறை கரங்க வட்டையில் மோதும் சிங்கள- முஸ்லிம்

இப்போது இந்த வயலில் முஸ்லிங்கள் கால் வைக்கமுடியாத நிலை உருவாகியுள்ளது என விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

கரங்க வட்டையில் வைத்து ஊடகங்களை சந்தித்த விவசாயிகள் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தனர். மேலும் அங்கு கருத்து தெரிவித்த விவசாயிகள் 2013 ஆம் ஆண்டு அம்பாறையில் நடைபெற்ற 'தேசத்துக்கு மகுடம்' கண்காட்சியின் பின்னர் அந்தக் காணிகள் முஸ்லிம்களிடமிருந்து கைநழுவச் செய்யப்பட்டன. தற்போது அந்தக் காணிக்குள் அத்துமீறி சிங்கள மக்கள் , வேளாண்மைச் செய்கையில் ஈடுபட்டுள்ளனர். அடாத்தாக தொடர்ச்சியாக குறித்த காணியில் சிங்கள மக்கள் விதைப்புக்கான உழவு நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றனர். எங்களின் காணி என்பதற்கான முழு ஆதாரமும், உறுதிப்பத்திரங்களும், வரைபடங்களும் எங்களிடம் உள்ளது. இந்த விவகாரம் தீர்க்கப்படாமல் நீடித்தால் இனக்கலவரம் உருவாகும் வாய்ப்பும் உள்ளது.

இது தொடர்பில் அம்பாறை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்தும், அவர்கள் இது தொடர்பில் எவ்வித நடவடிக்கைகளையும் மேற்கொள்ளவில்லை. இந்தப் பாரதூரமான விடயம் தொடர்பில் அம்பாறை மாவட்ட அரசியல்வாதிகள் எவரும் உரிய முறையில் கவனத்தைச் செலுத்தாமையே தங்களது காணிகள் பறிபோவதற்கான பிரதான காரணம்.

எங்களின் காணிக்குள் நாங்கள் சென்று வேளாண்மைக்கு தயாராகும் சந்தர்ப்பங்களில் சிங்கள மக்கள் மண்வெட்டி, கத்தி, கரும்பருக்கும் இயந்திரங்களை கொண்டு தாக்க வருகிறார்கள். இவ்விடயம் தொடர்பில் ஜனாதிபதி, பிரதமர், விவசாய அமைச்சர், பொலிஸ் உயரதிகாரிகள் தலையிட்டு உடனடியாக நியாயத்தை பெற்றுத்தர வேண்டும் என்று கோரிக்கை முன்வைத்தனர்.

# போதை பாவனையையும் கெட்ட நண்பர்களையும் விட்டுவிடு என்று புத்திமதி சொன்ன போதே மகன் கண்ணை தோண்டினான்

(எச்.எம்.எம்.பர்ஸான்)

போதைப்பொருள்பாவனைக்கு அடிமையான எனது மகனை திருத்துவதற்கு நான் பல்வேறு முயற்சிகளை செய்து வந்தேன். போதைப்பொருள்பாவிக்க வேண்டாம். கெட்ட நண்பர்களுடன் சேர வேண்டாம் என்று புத்திமதி சொன்ன போதே எனது மகன் எனது கண்ணை தோண்டி விட்டான் என்று 6% வயதுடைய தந்தையொருவர் தனது மன வேதனையை தெரிவித்தார்.

வாழைச்சேனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தியாவட்டவான் பாடசாலை வீதியில் கடந்த சனிக்கிழமை 18 ஆம் திகதி மகன் ஒருவன் தனது தந்தையை கொடூரமான முறையில் தாக்கி அவரது கண்ணை அவனது விரல்களால் தோண்டி எடுத்த கோரச் சம்பவமொன்று இடம்பெற்றுள்ளது.

இவ்வாறு மகனின் தாக்குதலுக்கு இலக்கான அந்நபர் வாழைச்சேனை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டு தற்போது வரை அவர் அங்கு சிகிச்சை பெற்று வருகிறார்.

இவ்வாறு கொடூரமான தாக்குதலுக்குள்ளான சத்கத்துல்லாஹ் அசனார் கருத்துத் தெரிவிக்கையில்,

எனது மகனுக்கு தற்போது பத்தொன்பது வயது. அவன் 201% ஆம் ஆண்டில் இருந்தே போதைக்கு அடிமையாகி விட்டான். நான் அவனை திருத்துவதற்கு என்னால் முடிந்த முயற்சிகளை செய்துள்ளேன்.

நான் பள்ளிவாசல் ஒன்றில்தான் கடமை புரிந்து வந்தேன். எனது மகன் போதைப்பொருள் பாவனையாளர் என்ற காரணத்தினால் நான் கடமையில் இருந்து விலகினேன்.

எல்லோரும் வந்து சொல்லுவார்கள் உங்க மகன் போதைப்பொருள் பாவிக்கிறார் என்று அதை கேட்கும்போது எனக்கு கவலைகள் வரும் எனக்கும் வெட்கம், மானம் இருக்கிறது அதனால்தான் எனக்கு தொடர்ந்தும் பள்ளிவாசலில் கடமை செய்ய முடியாமல் போனது.

எனது மகனை திருத்தி எடுக்க நான் 201% ஆம் ஆண்டு முதல் இது வரை ஐந்து தடவைகள் வாழைச்சேனை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளேன். அது பலனளிக்கவில்லை.

எனது மகனை விட்டுவிடுங்கள் என்று அவனது நண்பர்களிடமும் நான் அடிக்கடி சொல்லி வருவதுண்டு, திருந்தியதும் இல்லை எனது மகனை விட்டு அவர்கள் விலகியதுமில்லை.

சம்பவம் நடந்த அன்றைய தினம் எனது மகன் என்னிடம் ஆயிரம் ரூபாய் பணம் கேட்டான் நான்



கொடுக்கவில்லை. பணம் தராவிட்டால் கொலை செய்வேன் என்று சொல்லிக் கொண்டே என்னை தாக்கினான்.

எனது தலையில் கல்லால் கடுமையாக தாக்கினான் பின்னர் எனது கழுத்தை நெரித்து என்னை கொலை செய்ய அவன் முயற்சி செய்தான் நான் அவனிடம் போராடித்தான் எனது உயிரை காப்பாற்றிக் கொண்டேன். ஆனால் எனது மகன் எனது கண்ணை தோண்டி எடுத்துவிட்டான்.

இப்போது எனது இடது கண் முழுமையாக எடுக்கப்பட்டுவிட்டது. வலது கண்ணும் 80 வீதம் பாதிப்படைந்துள்ளதாக வைத்தியர்கள் சொல்லி இருக்கிறார்கள். ஆனால் நான் கவலைப்படவில்லை. தைரியமாக இருக்கிறேன். எனது மகனை நான் ஜெயிலுக்கு அனுப்பவில்லை அவர் செய்த வேலையால்தான் அவர் இப்போது சிறையில் இருக்கிறார்.

எனக்கு நடந்த இந்த சம்பவம் போல இனி யாருக்கும் நடக்கக் கூடாது பிள்ளைகள் எங்கு செல்கிறார்கள், யாருடன் பழகுகிறார்கள் என்பதை பெற்றோர்கள் அறிந்திருக்க வேண்டும். ஒவ்வொரு பெற்றோர்களும் பிள்ளைகள் விடயத்தில் விழிப்புடன் இருக்க வேண்டும். இப்போது போதைப்பொருள் பாவனையும், விற்பனையும் அதிகரித்து விட்டது அதனைக் கட்டுப்படுத்த அனைவரும் ஒன்றுதிரள வேண்டும் என்று கூறினார் கண்ணை இழந்து தவிக்கும் அசனார் என்பவர்.

# வீடு வீடாக சென்று தடுப்பூசிகள் ஏற்றும் பணி

(ந.குகதர்சன்)

கொரோனா எதிர்ப்பு தடுப்பூசியினால் ஏற்படும் நண்மைகள் தொடர்பாகவும் தடுப்பூசிகளை ஏற்றிக் கொள்ளதவர்களுக்கு தடுப்பூசிகளை வீடு வீடாக சென்று செலுத்தும் திட்டம் கோறளைப்பற்று மத்தி சுகாதாரவைத்திய அதிகாரி அலுவலக பிரிவில் வியாழக்கிழமை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.



மட்டக்களப்பு மாவட்ட சுகாதார பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் என்.மயூரனின் வழிகாட்டலில் கோறளைப்பற்று மத்தி சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் எஸ்.ரீ.நஜீப்கான் தலைமையில் இத்திட்டம் வாழைச்சேனை நான்காம் வட்டாரத்தில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

கோறளைப்பற்று மத்தி சுகாதார வைத்திய அதிகாரி அலுவலக பிரிவில் இருபது வயது மேற்பட்ட இளைஞர் யுவதிகளுக்கு முதலாம் கட்ட தடுப்பூசியும் முப்பது வயது மேற்பட்ட பொது மக்களுக்கு இரண்டாவது தடுப்பூசிகள் ஏற்றும் பணிகள் இடம் பெற்று வரும் நிலையில் தடுப்பூசிகளை பெற்றுக்கொள்ளாமல் இருப்பவர்கள் தொடர்பாக வீடு வீடாக சென்று அறிவுறுத்தல் செய்யப்படுவதுடன் அவர்களுக்கு தடுப்பூசிகளும் செலுத்தப்பட்டன.

தடுப்பு ஊசி ஏற்றும் பணியில் மேற்பார்வை பொதுச் சுகாதார பரிசோதகர் எம்.எஸ். நௌபர்;, பொதுச்சுகாதார பரிசோதகர்கள், கோறளைப்பற்று மத்தி பிரதேச செயலக அதிகாரிகள், சுகாதார வைத்திய அதிகாரி அலுவலக உத்தியோகத்தர்கள், பாதுகாப்பு பிரிவினர் எனப் பலர் கலந்து கொண்டனர்.

# சேனைப்பயிர்ச் செய்கையாளர்களுக்கும் வன இலாகா அதிகாரிகளுக்கும் இடையில் முறுகல்

(திருமலை ரவ்பீக் பாயிஸ்)

திருகோணமலை ரொட்டவெவ, மிரிஸ்வெவ பகுதியைச்சேர்ந்த சேனைப்பயிர்ச் செய்கையாளர்களுக்கும் வன இலாகா அதிகாரிகளுக்கும் இடையில் முறுகல் நிலை ஏற்பட்டுள்ளது.

கடந்த யுத்த காலம் தொடக்கம் இன்றுவரை தமது வாழ்வாதார தொழிலாக விவசாயம் மீன்பிடி மற்றும் சேனைப் பயிர்ச் செய்கை போன்றவற்றை மேற்கொண்டு வருவதாகவும் தற்போது சேனைப்பயிர்செய்கைக்காக தங்களுடைய காணிகளுக்குள் செல்லும் போது வன இலாகா அதிகாரிகள் செல்லக்கூடாது என தடுப்பதாகவும், பயமுறுத்துவதாக வும் அப்பகுதியிலுள்ள மக்கள் தெரிவிக்கின்றனர்.



இந்நிலையில் இன்றைய தினம் குறித்த பகுதிக்கு வன இலாகா அதிகாரிகள் சென்று சேனைப்பயிர்ச் செய்கையில் ஈடுபட்டு கொண்டிருந்த பயிர்ச்செய்கையாளர்களை அரசுக்குச் சொந்தமான காணியில் இருந்து செல்லுமாறு கூறியதையடுத்து பொதுமக்களுக்கும் வன இலாகா அதிகாரிகளுக்கும் இடையில் முறுகல் நிலை ஏற்பட்டுள்ளது.

யுத்த காலத்தின் போது தமது அன்றாட தொழிலாக சேனை பயிற்சிய மேற்கொண்டு வந்ததாகவும், மிரிஸ்வெவ மக்களின் நலன் கருதி மஹதிவுல்வெவ குளத்திற்குச் செல்லும் வீதியை கடந்த மஹிந்த ராஜபக்சவின் ஆட்சியின் போது நிர்மாணித்து கமநெகும, மகநெகும திட்டத்தின் கீழ் இரண்டு குளங்கள் புணரமைக்கப்பட்டுள்ளதாகவும் சேனைப்பயிர்ச் செய்கையாளர்கள் குறிப்பிடுகின்றனர். ஆனாலும் கடந்த வருடம் சேனைப் பயிர்ச் செய்கையில் ஈடுபட்டுக்கண்டிருந்த வேளை காடுகளை வெட்டாமல் தமக்குரிய காணிகளில் சேனைப்பயிர் செய்கையை முன்னெடுக்குமாறு அரசியல் வாதிகளினால் தெரிவிக்கப்பட்டது.

இந்நிலையில் அப்பகுதியில் உள்ள மக்கள் தொடர்ச்சியாக பயிர்ச் செய்கையில் ஈடுபட்டு வந்ததாகவும் இம்முறை வன இலாகா அதிகாரிகள் அரசுக்குச் சொந்தமான காணி என கூறி வருவதாகவும் வழக்குகளைப் பதிவு செய்ய முயற்சி செய்வதாகவும் சுட்டிக்காட்டுகின்றனர்.

ஆகவே தமது வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்காக சேனைப்பயிர்ச்செய்கையை மேற்கொண்டு வரும் மக்களுக்கு அரசாங்கம் யுத்த காலத்தின் போது பயன்படுத்திய காணிகளை உரியவர்களுக்கு வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

# இருபது வயது மேற்பட்ட இளைஞர் யுவதிகளுக்கு முதலாம் கட்ட தடுப்பூசி





(ந.குகதர்சன்)

அரசாங்கத்தினால் கொரோனா எதிர்ப்பு தடுப்பூசிகளை ஏற்றும் பணிகள் நாடளாவிய ரீதியில் தனிமைப்படுத்தல் ஊரடங்கு அமுலில் உள்ள போதும் தொடர்ந்தேர்ச்சியாக இடம்பெற்று வருகின்றது.

மட்டக்களப்பு மாவட்ட சுகாதார பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் என்.மயூரனின் வழிகாட்டலில் மாவட்டத்தில் உள்ள பதினான்கு சுகாதார வைத்திய அதிகாரி பிரிவிலும் தடுப்பூசிகள் ஏற்றும் நடவடிக்கை இடம்பெற்று வருகின்றது.

அந்தவகையில் வாழைச்சேனை சுகாதார வைத்திய அதிகாரி அலுவலக பிரிவில் தடுப்பூசி ஏற்றும் பணிகள் வாழைச்சேனை சுகாதார வைத்திய அதிகாரி ரி.எஸ்.சஞ்ஜீவ் தலைமையில் இடம் பெற்று வருகின்றது. வாழைச்சேனை சுகாதார வைத்திய அதிகாரி அலுவலக பிரிவில் இருபது வயது மேற்பட்ட இளைஞர் யுவதிகளுக்கு முதலாம் கட்ட தடுப்பூசியும் முப்பது வயது மேற்பட்ட பொது மக்களுக்கு இரண்டாவது தடுப்பூசி ஏற்றும் பணிகள் வாழைச்சேனை விநாயகபுரம் விநாயகர் வித்தியாலயத்தில் இன்று வியாழக்கிழமை நடைபெற்றது.

தடுப்பு ஊசி ஏற்றும் பணியில் மேற்பார்வை பொதுச் சுகாதார பரிசோதகர் ஆர்.நிதிராஜ், பொதுச் சுகாதார பரிசோதகர்கள், சுகாதார வைத்திய அதிகாரி அலுவலக உத்தியோகத்தர்கள், வாழைச்சேனை பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், பாதுகாப்பு பிரிவினர் எனப் பலர் கலந்து கொண்டனர்.

# வைத்தியசாலை கைக்குண்டுடன் தொடர்புடைய மற்றுமொரு சந்தேகநபர் திருகோணமலையில் கைது

(திருகோணமலை ரவ்பீக் பாயிஸ்)

கொழும்பு லங்கா ஹொஸ்பிடல் கைக்குண்டுடன் தொடர்புடைய மற்றுமொரு சந்தேகநபர் திருகோணமலையில் கைது செய்யப்பட்டுள்ளதாக தெரியவருகின்றது.

கடந்த வாரம் கொழும்பு லங்கா வைத்தியசாலையில் மீட்கப்பட்ட கைக்குண்டுடன் திருகோணமலையைச் சேர்ந்த பிரதான சந்தேக நபரொருவர் கைது செய்யப்பட்டார்.

இந்நிலையில் கைது செய்யப்பட்ட குறித்த சந்தேக நபரிடம் இடப்பட்ட வாக்குமூலத்தில் மற்றுமொரு சந்தேகநபர் திருகோணமலையில் வைத்து நேற்று கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இவ்வாறு சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டவர் கன்னியா விளாங்குளம் பீலியடி பகுதியை சேர்ந்த சிவக்குமார் கீர்த்திபன் (24வயது) எனவும் தெரியவருகின்றது.

கொழும்பு குற்ற விசாரணைப் பிரிவினரால் கைது செய்யப்பட்ட குறித்த நபரை கொழும்புக்கு அழைத்துச் சென்றுள்ளதாகவும் பொலிசார் தெரிவித்தனர்.







SRI JEWELLERY
Swiss, Zürich இல் மிகப் பிரமாண்டமாய் புதுப்பொலிவுடன்
பரம்பரை பரம்பரையாக நகைத் தொழிலில் அனுபவம் பெற்றவர்கள் நாங்கள்
வைர தாலி கொடி, மோதிரம், வளையல் பெயர் பெண்டன், மற்றும் அனைத்து நகைகளும் செய்து தரப்படும்.
திருத்த வேலைகளும் உடனுக்குடன் செய்து தரப்படும்.
+41 43 366 80 09 / +41 79 898 51 01
Mattengasse 17, 8005, Zürich, Swiss
info@srijewellery.ch



Sikaram
துரிதபணமாற்றுச்சேவை
Sikaram INTL Gmbh
Heinrich Strasse 120, 8005 Zürich
sikaramgmbh@gmail.com / www.sikaram.com
Tel : 044 2410241
Fax : 044 2410245


Prasath Coiffeur
Öffnungszeiten
Mo -Fr 10.00-19.00
Sa 09.00-18.00
Heinrichstrasse 120, 8005 Zürich.
NAT:076 565 64 57


Allegrotto Pizza Kurier
Allegrotto Pizza Kurier
Bederstrasse 102, 8002 Zürich.
044 280 40 30 | 076 326 91 18
Toll free 0844 80 40 30
pizzakingzurich@gmail.com.
www.allegrotto.ch
Seela Food Gastro AG
044 222 22 50
076 326 91 18
info@seelagastro.ch
www.seelagastro.ch
Züricherstrasse 15
8400 Winterthur.


SwissLife Select
சுவிசில் சொந்த வீடு வாங்க விரும்பும் உறவுகளே, அவதானமாகச் செயற்படுங்கள். உங்கள் கடனுக்கான வட்டி வீதம் எப்போதும் அதிகரிக்க கூடும். எனவே, சரியான வங்கியையும், வட்டி வீதத்தையும் தெரிந்து கொள்ளுங்கள்.
உங்கள் வாழ்வின் சகல அம்சங்களிலும் உங்களோடு
கரங் கோர்க்கும் ஒரே ஒரு நிறுவனம்...
மருத்துவ காப்புறுதி
வாகனக் காப்புறுதி
குழந்தைகளுக்கான காப்புறுதி
ஆயுட் காப்புறுதி
சட்டக் காப்புறுதி
Herr Krishnasamy
THILEEPAN
Dipl.Finanzberater IAF
Cicero : 15787
FIDLEG : KT 47598
Swiss Life Select AG
Zweigniederlassug Bern-Köniz
Sägerstrasse 79, 3098 Köniz.
Email : krishnasamy.thileepan@swisslife-select.ch Web : www.swisslife-select.ch
Telefon : 031 915 00 50 Telefax : 031 915 00 60 Handy : 079 889 60 65


Aaran Ayurveda
& Wellness Massage
Stampfenbachstrasse-24, 8001 Zurich, Tel: 043 243 60 66
Mobile: 079 940 1510 | www.aaranayurveda.ch
Krankenkasse Anerkannt


5ம், 6ம் ஆண்டு மாணவர்களுக்கான புதிய கணினி வகுப்புக்கள் ஆரம்பம்
எங்கே? சூரிச் மாநகரில் கணினித்துறையில் நூற்றுக்கணக்கான மாணவர்களை உருவாக்கிய
Online Tech Network
நிறுவனத்தில்
ECDL
Office
Windows 10
தொடர்புகளுக்கு
MANOJ MASTER
Online Tech Network
Militärstrasse 84, 8004 Zürich
043 811 80 90, 076 524 80 59

## திருமலையில் பல கரப்பந்தாட்ட மைதானங்கள்

# அமைச்சர் நாமல் திறந்து மக்கள் பாவனைக்கு கையளிப்பு





(இஃஜாஸ் ஏ பரீட்)

ஆரோக்கியமான தலைமுறையொன்றை கட்டி எழுப்பும் நோக்குடன் கிராமத்துக்கு ஒரு மைதானம் எனும் வேலைத்திட்டத்தின் கீழ்

நாடளாவிய ரீதியில் 335 கரப்பந்தாட்ட விளையாட்டு மைதானங்களை அபிவிருத்தி செய்யும் தேசிய வேலைத்திட்டத்தின் கீழ் திருகோணமலை மாவட்டத்தில் நிர்மாணிக்கப்பட்ட கரப்பந்தாட்ட மைதானங்கள் பல இளைஞர் மற்றும் விளையாட்டு ,அபிவிருத்தி ஒருங்கிணைப்பு மேற்பார்வை அமைச்சர் நாமல் ராஜபக்ஷ அவர்களினால் மக்கள் பாவனைக்காக திறந்து கையளிக்கப்பட்டது.

கோமரன்கடவெல, குச்சவெளி நாவற்சோலை, திருகோணமலை பட்டனமும் சூழலும் வெள்ளைமணல் ,கந்தளாய் லீலாரத்ன மைதானம், சேருவில மற்றும் வெருகல் ஆகிய பிரதேசங்களில் நிர்மாணிக்கப்பட்ட கரப்பந்தாட்ட மைதானங்கள் இவ்வாறு அமைச்சர் நாமல் ராஜபக்ஸ அவர்களினால் மக்கள் பாவனைக்கு கையளிக்கப்பட்டது.

இதற்காக ஒரு மைதானத்தை அபிவிருத்தி செய்வதற்கு 15 அஇ லட்சம் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இவ் வேலைத் திட்டத்திற்கமைய திருகோணமலைபட்டினமும் சூழலும் பிரதேச சபையின் பங்களிப்புடன் வெள்ளைமணல் தி/அல் அஸ்ஹர் முஸ்லிம் மகா வித்தியாலய விளையாட்டு மைதானத்தில் கரப்பந்தாட்ட மைதானம் அமைக்கப்பட்டு அமைச்சர் நாமல் ராஜபக்ஷ அவர்களால் உத்தியோகபூர்வமாக திறந்து கையளிக்கப்பட்டது. .

இந்நிகழ்வில் கலந்து கொண்ட அமைச்சரிடம், பிரதேச அபிவிருத்தி சம்பந்தமாகவும், தி/அல் அஸ்ஹர் முஸ்லிம் மகா வித்தியாலய ஆசிரியர்கள் பற்றாக்குறை நிவர்த்தி செய்வது தொடர்பாகவும், ,குடாக்கரை பிரதேசத்தில் இளைஞர்களின் நலன் கருதி விளையாட்டு துறையை அபிவிருத்தி செய்து தருவது தொடர்பாகவும் , பிரதேச மக்கள் சார்பாக பட்டினம் சூழலும் பிரதேச சபை உப தவிசாளர் ஏ.எல் எம்.நௌபர் அவர்களால் முன்வைக்கப்பட்டது.

இந்நிகழ்வில் கிராமிய மற்றும் பாடசாலை விளையாட்டு உட்கட்டமைப்பு வசதிகள் மேம்பாட்டு இராஜாங்க அமைச்சர் தேனுக விதானகமகே

திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் இணைத் தலைவருமாகிய கபில நுவன் அத்துகோள, மாவட்ட அரசாங்க அதிபர் சமன் தர்சன பாண்டிகோரள, பிரதேச அரசியல் தலைமைகள், அரச அதிகாரிகள், அதிபர் , உள்ளூர் சங்க நிர்வாகிகள் மற்றும் இளைஞர்கள் பலரும் கலந்து கொண்டனர்.

## திருமலை மாவட்டத்தில் நீண்டகாலமாக காணிகளில் வசித்து வருவோர்களுக்கு காணி உறுதிப் பத்திரம்

## அமைச்சர் நாமல் வழங்கி வைப்பு

(இஃஜாஸ் ஏ பரீட்)



திருகோணமலை மாவட்டத்தின் கந்தளாய், சேருவில மற்றும் வெருகல் ஆகிய பிரதேச செயலாளர் பிரிவுகளில் நீண்டகாலமாக தமது காணிகளில் வசித்து வரும் மக்களுக்கான காணி உறுதிப்பத்திரம் வழங்கும் நிகழ்வு உரிய பிரதேச செயலகங்களில் இளைஞர் மற்றும் விளையாட்டு, அபிவிருத்தி ஒருங்கிணைப்பு மற்றும் மேற்பார்வை அமைச்சர் நாமல் ராஜபக்ஷவின் தலைமையில் நடைபெற்றது.

கடந்த முப்பது ,நாற்பது வருடங்களுக்கு மேலாக குறித்த மக்கள் உரிய காலங்களில் வசித்து வருவதாகவும் பல்வேறு தடவைகள் தமக்கு காணி உறுதிப்பத்திரங்களை வழங்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்ட போதும் அந்த கனவு நனவாகவில்லை என்றும் தங்களுடைய கனவு நீண்ட காலத்திற்குப் பின்னர் இன்று நிறைவேற்றப்பட்டமை குறித்து அரசாங்கத்துக்கு நன்றிகளை தெரிவித்துக்கொள்வதாக இதன்போது உரிய மக்கள் தெரிவித்தனர்.

மாவட்ட அரசாங்க அதிபர் தலைமையிலான பிரதேச செயலாளர்கள், அரச உத்தியோகத்தர்கள் மிகக் குறுகிய காலத்தில் குறித்த மக்களுடைய காணி உறுதிப்பத்திரங்களை வழங்குவதற்கான செயற்பாடுகளை முன்னெடுத்தமை குறித்து இதன்போது அமைச்சர் பாராட்டுக்களை தெரிவித்தார்.

இவ் வேலைத்திட்டத்தின் கீழ் திருகோணமலை மாவட்டத்தில் ஏனைய பிரதேச செயலாளர் பிரிவுகளிலும் இதுவரைகாலமும் தங்களுடைய காணிகளுக்கு உறுதிப்பத்திரம் இல்லாதவர்களுக்கு உறுதிப்பத்திரம் மிக விரைவில் வழங்கப்படுவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

மேலும் குறித்த பிரதேச செயலாளர் பிரிவுகளில் இதுவரையும் வீடு இல்லாதவர்களுக்கு வீட்டை அமைப்பதற்கான அனுமதிக் கடிதமும் இதன்போது அமைச்சர் அவர்களினால் உரிய பயனாளிகளுக்கு வழங்கி வைக்கப்பட்டது.

அதிமேதகு ஜனாதிபதி மற்றும் மாண்புமிகு பிரதம மந்திரி தலைமையிலான அரசாங்கத்தினால் தமக்கென சொந்தமாக ஒரு வீடு இல்லாதவர்களுக்கு தமக்கான ஒரு சொந்த வீடு வழங்கும் திட்டம் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் அதன் அடிப்படையில் வீடற்றவர்களின் விபரங்கள் திரட்டப்பட்டு அவர்களது தேவைகள் கிரமமான முறையில் கட்டம் கட்டமாக வழங்கப்படும் எனவும் பாரிய சவாலான கோவிட் வைரஸுக்கு மத்தியிலும் அரசாங்கம் மக்களுக்கான அபிவிருத்தி செயற்பாடுகளை தடையின்றி முன்னெடுத்து வருவதாக இதன்போது அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் கிராமிய மற்றும் பாடசாலை விளையாட்டு உட்கட்டமைப்பு வசதிகள் மேம்பாட்டு அமைச்சர் தேனுக விதானகமகே, திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் ஒருங்கிணைப்பு குழுவின் தலைவருமாகிய கபில நுவன் அத்துகோரல, மாவட்ட அரசாங்க அதிபர் சமன் தர்சன பாண்டிகோராள, பிரதேச அரசியல் தலைமைகள் அரச அதிகாரிகள் மற்றும் பொதுமக்களும் கலந்து கொண்டனர்.

## திருகோணமலையில் சீமெந்துக்கு தட்டுப்பாடு பதுக்கலில் அதிக விலைக்கு விற்பனை

(திருகோணமலை ரவ்பீக் பாயிஸ்)

திருகோனமலையில் சீமெந்துக்கு பெரும் தட்டுப்பாடு நிலவுவதாகவும் அதிக விலைக்கு பதுக்களில் சீமெந்தினை விற்பனை செய்யப்படுவதாகவும் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.



நாட்டில் ஊரடங்கு அமுல்படுத்தப்பட்டுள்ள நிலையில் அரசாங்கத்தினால் கட்டுமான பணிகளுக்கு அனுமதி வழங்கியுள்ள நிலையில் இவ்வாறு சீமெந்துக்கு தட்டுப்பாடு நிலவி வருவதாக கட்டுமான பணியாளர்கள் தெரிவிக்கின்றனர்.

மேலும் மாவட்டத்தில் பல இடஙக்ளில் சீமெந்து பாக்கட் ஒன்றின் அதிகபட்ச விலை 1005 ரூபாவாக நிர்ணயிக்கப்பட்டுள்ள நிலையில் சந்தையில் பதுக்கி வைத்து 1350 ரூபா வரை விற்பனை செய்யப்படுவதாவும் இதனால் அன்றாட கூலி வேலை செய்யும் கட்டுமான பணியாளர்களின் வாழ்வாதாரம் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதகவும் குற்றம் சுமத்துகின்றனர்.

இவ்வாறு மாவட்டத்தில் பல அத்தியாவசிய பொருட்களின் தட்டுப்பாடு நிலவி வரும் நிலையில் சீமத்துக்கும் தட்டுப்பாடு நிலவுவது சீமெந்து மாபியாக்களை சீக்கிரத்தில் உருவாகும் எனவும் உரிய அதிகாரிகள் இதற்கான நடவடிக்கை எடுக்குமாறும் கட்டுமான பணியாளர்கள் வேண்டுகோள் விடுக்கின்றனர் .

## அரசாங்கம் மக்களுக்கான அபிவிருத்தி செயற்பாடுகளை தடையின்றி முன்னெடுத்து வருகிறது – அமைச்சர் நாமல்

(ஹஸ்பர் ஏ ஹலீம்)



திருகோணமலை மாவட்டத்தின் கந்தளாய், சேருவில மற்றும் வெருகல் ஆகிய பிரதேச செயலாளர் பிரிவுகளில் நீண்டகாலமாக தமது காணிகளில் வசித்து வரும் மக்களுக்கான காணி உறுதிப்பத்திரம் வழங்கும் நிகழ்வு உரிய பிரதேச செயலகங்களில் இளைஞர் மற்றும் விளையாட்டு, அபிவிருத்தி ஒருங்கிணைப்பு மற்றும் மேற்பார்வை அமைச்சர் நாமல் ராஜபக்ஷவின் தலைமையில் நடைபெற்றது.

கடந்த முப்பது ,நாற்பது வருடங்களுக்கு மேலாக குறித்த மக்கள் உரிய காலங்களில் வசித்து வருவதாகவும் பல்வேறு தடவைகள் தமக்கு காணி உறுதிப்பத்திரங்களை வழங்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்ட போதும் அந்த கனவு நனவாகவில்லை என்றும் தங்களுடைய கனவு நீண்ட காலத்திற்குப் பின்னர் இன்று நிறைவேற்றப்பட்டமை குறித்து அரசாங்கத்துக்கு நன்றிகளை தெரிவித்துக் கொள்வதாக இதன்போது உரிய மக்கள் தெரிவித்தனர்.

மாவட்ட அரசாங்க அதிபர் தலைமையிலான பிரதேச செயலாளர்கள், அரச உத்தியோகத்தர்கள் மிகக் குறுகிய காலத்தில் குறித்த மக்களுடைய காணி உறுதிப்பத்திரங்களை வழங்குவதற்கான செயற்பாடுகளை முன்னெடுத்தமை குறித்து இதன்போது அமைச்சர் பாராட்டுக்களை தெரிவித்தார்.

இவ் வேலைத்திட்டத்தின் கீழ் திருகோணமலை மாவட்டத்தில் ஏனைய பிரதேச செயலாளர் பிரிவுகளிலும் இதுவரைகாலமும் தங்களுடைய காணிகளுக்கு உறுதிப்பத்திரம் இல்லாதவர்களுக்கு உறுதிப்பத்திரம் மிக விரைவில் வழங்கப்படுவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

மேலும் குறித்த பிரதேச செயலாளர் பிரிவுகளில் இதுவரையும் வீடு இல்லாதவர்களுக்கு வீட்டை அமைப்பதற்கான அனுமதிக் கடிதமும் இதன்போது அமைச்சர் அவர்களினால் உரிய பயனாளிகளுக்கு வழங்கி வைக்கப்பட்டது.

அதிமேதகு ஜனாதிபதி மற்றும் மாண்புமிகு பிரதம மந்திரி தலைமையிலான அரசாங்கத்தினால் தமக்கென சொந்தமாக ஒரு வீடு இல்லாதவர்களுக்கு தமக்கான ஒரு சொந்த வீடு வழங்கும் திட்டம் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் அதன் அடிப்படையில் வீடற்றவர்களின் விபரங்கள் திரட்டப்பட்டு அவர்களது தேவைகள் கிரமமான முறையில் கட்டம் கட்டமாக வழங்கப்படும் எனவும் பாரிய சவாலான கோவிட் வைரஸுக்கு மத்தியிலும் அரசாங்கம் மக்களுக்கான அபிவிருத்தி செயற்பாடுகளை தடையின்றி முன்னெடுத்து வருவதாக இதன்போது அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் கிராமிய மற்றும் பாடசாலை விளையாட்டு உட்கட்டமைப்பு வசதிகள் மேம்பாட்டு அமைச்சர் தேனுக விதானகமகே, திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் ஒருங்கிணைப்பு குழுவின் தலைவருமாகிய கபில நுவன் அத்துகோரல, மாவட்ட அரசாங்க அதிபர் சமன் தர்சன பாண்டிகோராள, பிரதேச அரசியல் தலைமைகள் அரச அதிகாரிகள் மற்றும் பொதுமக்களும் கலந்து கொண்டனர்.

## கசிப்பு தயாரிப்பு நிலையம் சுற்றி வளைப்பு

### 29000 மில்லி லீற்றர் கசிப்புடன் இரு பெண்கள் கைது



(ரீ.எல்.ஜவ்பர்கான்)

தனிமைப் படுத்தல் ஊரடங்குச் சட்டத்தைப் பயன்படுத்தி சட்ட விரோத போதைப் பொருள் தயாரிக்கும் பணிகள் மட்டக்களப்பு மாவட்டத்தில் அதிகரித்துள்ளன.

மட்டக்களப்பு ஏறாவூர் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட களுவண்கேளி கிராமத்தில் இன்று அதிகாலை மாவட்ட குற்ற விசாரணைப் பிரிவு அதிகாரிகளினால் கசிப்பு உற்பத்தி நிலையம் சுற்றி வளைக்கப்பட்டதாக குற்ற விசாரணைப பிரிவு பொறுப்பதிகாரி ஐ.பி.பண்டார தெரிவித்தார்.

இச் சுற்றிவளைப்பின் போது 29000 மில்லி லீற்றர் கசிப்புடன் இரு பெண்கள் கைது செய்யப்படதுடன் கசிப்பு தயாரிக்க உபயோககிக்கும் பெருமளவு உபகரணங்களும் பொலிசாரினால் கைப்பற்றப்பட்டன.

கைப்பற்றப்பட்ட பொருட்கள் சந்தேக நபர்கள் ஏறாவூர் சுற்றுலா நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்படவுள்ளதகா பொலிசார் தெரிவித்தனர்.

## மின்னல் தாக்கியதில் வேம்பு மரமொன்று வீழ்ந்ததில் திருமலை வைத்தியசாலை நடைபாதை கூரை முற்றாக சேதம்

(திருகோணமலை ரவ்பீக் பாயிஸ்)
(அச்சுதன்)

திருகோணமலை பொது வைத்தியசாலையில் வேம்பு மரமொன்று வீழ்ந்ததில் வாட் மற்றும் சத்திர சிகிச்சை பிரிவுக்கு செல்லும் நடைபாதை கூரை முற்றாக சேதமடைந்துள்ளதாக தெரியவருகின்றது.

காற்றுடன் கூடிய கன மழையின் காரணமாக திருகோணமலை வைத்தியசாலையின் வளாகத்தில் நின்ற வேம்பு மரம் மின்னல் தாக்கியதில் சரிந்து வீழ்ந்துள்ளதாகவும் வைத்தியசாலையின் வாட் மற்றும் சத்திர சிகிச்சை பிரிவுக்கு செல்லும் நடைபாதைக் கட்டடம் முற்றாக சேதமடைந்துள்ளதுடன் உயிர்களுக்கு சேதம் ஏற்படவில்லையெனவும் திருகோணமலை பொது வைத்தியசாலையின் பணிப்பாளர் தெரிவித்தார்

இதன்போது கட்டத்தின் கட்டுமானத்தில் இடம்பெற்றுள்ள ஊழல் வெளிவந்துள்ளது

திருகோணமலை பொது வைத்தியசாலையில் நிர்மாணப் பணிகளில் பல மோசடிகள் இடம்பெற்று வருவதாக ஊழியர்கள் மற்றும் பொதுமக்களினால் முறைப்பாடுகள் தெரிவிக்கின்றது

இந்நிலையில் இவ் கட்டடத்தின் வைத்தியசாலை கட்டடத்தின் ஒப்பந்தகாரர்களின் ஊழல் வெளிவந்துள்ளது வேம்பு மரம் வீழ்ந்த தூண் பகுதியில் குறிப்பாக தூண்கள் எவையும் கம்பி இடப்பட்டு கொங்கிறீட் தூண் இல்லாமல் கட்டப்பட்டுள்ளமை தெரியவந்துள்ளது

மேமும் இவ் அனர்த்தத்தின் பொது சத்திர சிகிச்சை நிலயத்திட்க்கு செல்லும் பல வயர்கள் காணப்படுவதனால் கவனமாகா இதனை அப்புறப்படுத்த திருகோணமலை தீயணைப்பு படையினரின் உதவியுடன் மேட்கொள்ளப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.





நாள் தோறும்
சுபீட்சம் மின்னிதழை
பார்வையிட
www.supeedsam.com

SAYENTHIRAN KATHIR
Geschäftsführer
S TRAVEL
Flugtickets | Hotels | Reiseversichenungen
Luisenstr 21 8005 Zurich | info@stravel.ch www.stravel.ch
044 419 91 00 079 913 77 59

உதயகுமார் கல்வி நிலையம்
முனைக்காடு மேற்கு,
கொக்கட்டிச்சோலை
தொடர்புகளுக்கு:
076-1549129
+966539028295
+966502126923
n.uthayakumar1981@gmail.com

"கல்விக்கு கைகொடுப்போம்"
எல்லாவற்றையும் இழந்து நிற்கும் எமது சமூகத்தை
கல்வியால் மட்டுமே கட்டியெழுப்ப முடியும்
அறிவாலயம்
அறக்கட்டளை நம்பிக்கை நிதியம்
இலங்கை.
ஸ்தாபகர் அலையப்போடி நல்லரெத்தினம்
ARIVALAYAM FOUNDATION TRUST
தலைமைக்காரியாலயம்: பண்டாரியாவெளி, கொக்கட்டிச்சோலை
arivalayam@hotmail.fr +94 77 068 4555 | Sriram : +94 77 652 0206

SHELVA SWISS
YOUR FUTURE OUR VISION
041 790 64 63 079 514 64 28
வீட்டுக்கடன் 0.62% தொடக்கம்
10% இல் சொந்த வீடு கட்ட அல்லது வாங்க
- இருக்கும் வீட்டை வைத்து இன்னொரு வீட்டை வாங்க...
- வீடு வாங்க, விற்க, கட்ட, திருத்த...
- வீடு வாங்குவதற்கான ஆயுட்காப்புறுதி
- Architect வேலைகள்
இலங்கையில் வீடுகள், காணிகள், விற்க, வாங்க, கட்ட, திருத்த
இலங்கைக்கு போக வேண்டிய தேவை இல்லை.
SWISS இல் இருந்து கொண்டே செய்யலாம்.
» கிறங்கன்காசே » பயணக்காப்புறுதி
» ஆயுட்காப்புறுதி » சட்டக் காப்புறுதி

கிழக்கிலங்கையின் காரைதீவில் வெளிநாட்டு
துரித பொதிகள் சேவையில் புதிய பரிணாமம்




வெளிநாட்டில் இருக்கும் உங்கள்
உறவுகள் நண்பர்களுக்கு பொதிகள்
மற்றும் ஆவணங்களை துரித
வேகத்தில் உரிய முகவரியில்
கொண்டு சேர்க்க
இன்றே நாடுங்கள்
TA parcel.lk LOCAL & INTERNATIONAL COURIER SERVICE
TA ENTERPRICES & CO வின்
TA PARCEL.LK

| | |
|---|---|
| துரித வேகம். | London, Swiss, France, Canada 3 Days Only) Quick Service |
| உலகின் எப்பாகத்திற்கும் பொதிகள் அனுப்பும் வசதி. | All Countries |
| பொதிகள் முழு (100%) காப்புறுதி செய்யப்படுகின்றது. | 100% Insured |
| 365 நாட்கள் 24 மணி நேர வாடிக்கையாளர்கள் சேவை. | 365 Days 24 Hours Service |
| உரிய முகவரியில் கொண்டு சேர்க்கப்படும். | Door to Door Delivery |
| இணையத்தளம் மூலம் உங்கள் பொதிகள் எங்கு உள்ளது என கண்டறியும் வசதி. | Online Tracking System |
| சிறந்த பொதியாக்கம். | Quality Packing |

நீங்கள் பொதிகள் ஒப்படைக்கும் போதே Traking Number வழங்கப்படும்.
இவ்வாறான நம்பகதன்மைகளுடன் உங்கள் உறவுகளின் எதிர்பார்ப்புகளை கொண்டு சேர்க்கின்றோம்.
எங்கள் நிறுவனத்தின் ஊடாக பொதிகள் அனுப்பும் ஒவ்வொரு வாடிக்கையாளர்களுக்கும் பெறுமதியான பரிசில்கள் மற்றும் அன்பளிப்புகள் காத்திருக்கின்றது.
அரச மற்றும் தனியார் நிறுவனங்களுக்கு விசேட விலைக்கழிவு.
வெளிநாடுகளில் இருந்து அனுப்பப்படும் பொதிகளையும் இங்கு பெற்றுக்கொள்ளலாம்.
TA PARCEL.LK | Main Street Karaithivu | taparcel.lk@gmail.com, +94774385151, +94752542651

GRÜNAU 1
# ITALY # INDIAN # THAI # SRILANKA
Fruhstuck / Mittagessen / Abendessen
Öffnungszeiten
Montag - Sonntag
08:00AM - 22:00PM
ORDER NOW
TANDOORI
FISH SPL
BBQ GRILL
BIRIYANI SPL
CURRY GERICHTE
MIX SABJI DESERTSLIEF



CALL for FREE DELIVERY
044 260 2222 079 563 2222
Meierwissenstr 58, 8064 Zürich
www.grunau1restaurant.com

# மட்டக்களப்பில் பண்ணையாளர்களது குறைகளை கேட்டறிந்து கோண்டார் அமைச்சர் நாமல் ராஜபக்ஷ!!

( எஸ்.எஸ்.அமிர்தகழியான்)

மட்டக்களப்பு மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்தித் திட்டங்களை மக்கள் பாவனைக்காக கையளிப்பதற்கும், மாவட்டத்தில் எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படவுள்ள அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பாக ஆராய்வதற்குமாக மட்டக்களப்பு மாவட்டத்திற்கு அமைச்சர் நாமல் ராஜபக்ஷ விஜயமொன்றினை மேற்கொண்டிருந்தார்.

இதன்போது பண்ணையாளர்களது குறைகளை கேட்டறிவதற்காக கரடியனாறு அரச கால்நடை வைத்தியர் அலுவலகத்தில் சென்று அங்கு பண்ணையாளர்களை சந்தித்த அமைச்சர் நாமல் ராஜபக்ஷ உள்ளிட்ட குழுவினர் பண்ணையாளர்களது பிரச்சனைகள் தொடர்பாக விரிவாக ஆராய்ந்திருந்தனர்.





இதன்போது பண்னையாளர்களால் அவர்கள் எதிர்நோக்கும் பிரச்சனைகள் தொடர்பாகவும், நாட்டின் பால் உற்பத்தியில் கிழக்கு மாகாணம் 18 வீதமான பங்களிப்பினை வழங்குவதாக சுட்டிக்காட்டிய பண்ணையாளர்கள் தமக்கு பண்ணைகளை அமைப்பதற்காக இரண்டு ஏக்கர் வீதம் காணிகளை கோறியதுடன், தமக்கு நீண்டகால பிரச்சனையாகவுள்ள மேச்சல் தரை பிரச்சனையினையும் தீர்த்துத்தருமாறும் கோரிக்கையினை முன்வைத்துள்ளனர்.

குறித்த கலந்துரையாடலின்போது பின்தங்கிய கிராமிய அபிவிருத்தி, வீட்டு விலங்கின வளர்ப்பு மற்றும் சிறுபொருளாதார பயிர்ச் செய்கை மேம்பாட்டு இராஜாங்க அமைச்சர்

சதாசிவம் வியாழேந்திரன், இளைஞர் மற்றும் விளையாட்டுத்துறை இராஜாங்க அமைச்சர் தேனுக வித்தானக, பாராளுமன்ற உறுப்பினர் நசீர் அஹமட், மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் கே.கருணாகரன், தமிழ் பிரதேச அபிவிருத்திக் குழுக்களின் பிரதி தலைவரும் மட்டக்களப்பு மாவட்ட பொதுஜன பெரமுன கட்சியின் அமைப்பாளருமான ப.சந்திரகுமார், மற்றும் அரச கால்நடை வைத்தியர் அலுவலகத்தின் அதிகாரிகள் மற்றும் பண்ணையாளர்கள் உள்ளிட்ட பலரும் கலந்துகொண்டிருந்தனர்.

# மட்டக்களப்பு போதனா வைத்தியசாலை புற்றுநோயியல் பிரிவிற்கு அமைச்சர் நாமல் ராஜபக்ஷ விஜயம்

(எஸ்.எஸ்.அமிர்தகழியான்)

மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையின் புற்றுநோயியல் பிரிவிற்கு தேசிய இளைஞர் விளையாட்டு விவகார மற்றும் அபிவிருத்தி மேற்பார்வை அமைச்சர் நாமல் ராஜபக்ஸ விஜயம்செய்து பார்வையிட்டார்.

பின்தங்கிய கிராம அபிவிருத்தி மனைசார் கால்நடை வளர்ப்பு மற்றும் சிறு பொருளாதார பயிர்ச்செய்கை மேமம்பாட்டு இராஜாங்க அமைச்சர் சதாசிவம் வியாழேந்திரனின் அழைப்பின் பேரில் மட்டக்களப்பிற்கு விஜயம் செய்த அமைச்சர் நாமல் ராஜபக்ஷ மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையின் புற்றுநோயியல் பிரிவில் அமைக்கப்பட்டுள்ள கதிர்வீச்சு சிகிச்சைப்பிரிவினைப் பார்வையிட்டார்.

மேலும் இப்போதனா வைத்தியசாலையில்





காணப்படும் குறைபாடுகள் தொர்பாகவும் அமைச்சர் நாமல் ராஜபக்நு வைத்தியசாலைப் பணிப்பாளர் திருமதி. கலாரன்ஜினி கணேசலிங்கம் உட்பட வைத்திய நிபுனர்களிடம் கேட்டறிந்து கொண்டார்.

இது தொடர்பாக இராஜாங்க அமைச்சர் வியாழேந்திரன் கருத்து தெரிவிக்கையில் இவ்வைத்தியசாலையின் புற்று நோயியல் பிரிவில் காணப்படும் குறைபாடுகள் தொடர்பாகவும், பிணவரைக் கட்டிடம் மற்றும் மருந்துக் களஞ்சிய அறைக் கட்டிடம் அமைத்தல் போன்ற தேவைகளை முன்வைத்திருப்பதாகத் தெரிவித்தார். மேலும் கிழக்கு மாகாணத்திலுள்ள ஒரேயொரு போதனா வைத்தியசாலையாகிய இதன் தேவைகளை எதிர்வரும் நாட்களில் பூர்த்தி செய்து சகல வசதிகளும் கொண்ட தரம் வாய்ந்த வைத்தியாசாலையாக தரம் உயர்த்த தமது ஒத்துளைப்புகளை வழங்குவதாகத் தெரிவித்தார்.

இந்நிகழ்வின்போது இளைஞர் மற்றும் விளையாட்டுத்துறை இராஜாங்க அமைச்சர் தேனுக விதனகே, மாவட்ட அரசாங்க அதிபர் கே.கருணாகரன், தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் பொதுச் செயலாளர் பூ. பிரசாந்தன் உட்பட அரசியல் பிரமுகர்கள், வைத்திய நிபுனர்கள் பலரும் பிரசன்னமாயிருந்தனர்.

# மன்னாரில் அன்பர்கள் மற்றும் நகர சபை நிதி உதவியில் மின் தகன நிலையம் விரைவில் நிர்மாணிக்கப்படும்

## அரச அதிபர் திருமதி ஸ்ரான்லி டீமெல்

வாஸ் கூஞ்ஞ

மன்னாரில் அன்பர்களின் நிதி பங்களிப்பைக் கொண்டு மின் தகனம் நிலையத்தின் நிர்மானம் வெகு விரைவில் ஆரமப்பிக்கப்படும் என மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி அ.ஸ்ரான்லி டீமெல் இவ்வாறு தெரிவித்தார்.

மன்னாரில் கொரோனா தொற்றாளர்கள் மரணிக்கும் வேளையில் இவர்களின் சடலங்களை வெளி மாவட்டங்களுக்கே எடுத்துச் செல்வதில் மிக கஷ்டநிலை இங்கு ஏற்பட்டது. இதை கவனத்துக்கு எடுத்துக் கொண்ட மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி அ.ஸ்ரான்லி டீமெல் தலைமையில் கொண்ட குழுவினர் மன்னாரில் மின் தகனம் நிலையம் ஒன்று அமைக்கப்பட வேண்டும் என்ற அவசியத்தை உணர்ந்து இதற்கான தீவிர முயற்சியை அன்மையில் மேற்கொண்டனர்.

இது தொடர்பாக மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி அ.ஸ்ரான்லி டீமெல்லிடம் ஊடக சந்திப்பின்போது கேட்கப்பட்ட போது அவர் தெரிவிக்கையில்

மன்னாரில் மின் தகனம் நிலையம் அமைப்பதற்காக மேற்கொள்ளப்பட்ட முயற்சிக்கு எமக்கு பெரும் வெற்றி காணப்படுகின்றது. மன்னார் நகர சபையானது இவ் மின் தகன நிலையத்துக்கான கட்டிடத்தை தங்கள் நிதியில் பூரணப்படுத்தி தருவதுக்கு எமக்கு தெரியப்படுத்தியுள்ளனர். இதைத் தொடர்ந்து இதற்கான இயந்திர தொகுதியை பெறுவதற்கான நடவடிக்கையை எம்மால் தற்பொழுது மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

இதற்கான நிதியானது இந்த செறாப்ப காலத்தில் இதுவரைக்கும் அன்பர்களிடமிருந்து 21 லட்சம் ரூபா எமக்கு அன்பளிப்பாக கிடைக்கப்பெற்றுள்ளது.

இந்த நிதியையும் பயன்படுத்தி வெகு விரைவில் இதற்கான வேலைத்திட்டங்களை ஆரம்பிக்க இருக்கின்றோம் என இவ்வாறு தெரிவித்தார்.

# கின்னியா இராவணன் வீதியில் பாரிய கிரவல் மண் அகழ்வு



(சி.சசிகுமார்)

திருகோணமலை பட்டினமும் சூழலும் பிரதேச செயலாளர் பிரிவு கன்னியா இராவணன் வீதியில் பாரிய கிரவல் மண் அகழ்வு இடம்பெற்று வருகிறது.

தினமும் நூற்றுக்கும் அதிகமான கனரக வாகனங்களில் இங்கிருந்து கிரவல் எடுத்துச் செல்லப்படுகிறது.

வாகனங்கள் பயணிப்பதால் இராவணன் வீதி குன்றும் குழியுமாக காணப்படுகிறது.

கிரவல்மலை வெட்டி மண் அகழப்படுவதால் எதிர்காலத்தில் அருகில் உள்ள நிலங்களும் குடிமனைகளும் பாதிக்க கூடிய வாய்ப்பு உள்ளதாக பிரதேசவாசிகள் தெரிவிக்கின்றனர்.

இதே போல் இப்பிரதேசத்தில் பல இடங்களிலும் அகழ்வு வேலைகள் நடைபெற்று வருகிறது.

இம்மலையில் 5 ஏக்கருக்கும் அதிகமான பரப்பில் காட்டு மரங்களும் பெருமளவில் அழிக்கப்பட்டுள்ளது.




# மட்டக்களப்பு இளைஞர்களை கோழும்புக்கு அழைத்துச் செல்ல வழிசெய்யப்படும்

(ரக்ஸனா)

கோட்டைக்கல்லாறு மைதானத்தைப் புணரமைப்புச் செய்வதற்கு எதிர்காலத்தில் நிதி ஒதுக்கீடு செய்யப்படும். இந்தக் கிராமத்திலும், மட்டக்களப்பு மாவட்டதிலும் சிறப்பான விளையாட்டு வீரர்கள் இருக்கின்றார்கள். சிறந்த கிறிக்கட், வீரர்கள் இருக்கின்றார்கள்.

என இளைஞர் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர் நாமல் ராஜபக்ஸ தெரிவித்துள்ளார்.

கிராமிய விளையாட்டு மைதானங்களை மேம்படுத்தும் தேசிய வேலைத் திட்டத்தின் கீழ் இளைஞர் மற்றும் விளையாட்டுத் துறை மைச்சின் 1.5 நிதி ஒதுக்கீட்டின் கீழ் புணரமைக்கப்பட்ட கோட்டைக்கல்லாறு கிழக்கு பொது விளையாட்டு மைதானம் வியாழக்கிழமை (23) திறந்து வைக்கப்பட்டது இதன்போது கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே



அவர் இவ்வாறு தெரிவித்தார். இதன்போது அவர் மேலும் தெரிவிக்கடியில்

கடந்த காலங்களில் பல வீரர்களை கொழும்புக்கு அழைத்திருந்தோம். சிலர் கொழும்பில் இருக்க முடியாது என திரும்பி வந்து விட்டார்கள். எதிர்காலத்திலே இக்கிராமத்திலுள்ள இளைஞர்கள் விளையாட்டுக்களைப் பழக்கி கொழும்புக் அழைத்துச் செல்வதற்குரிய வழிமுறைகளை உருவாக்குவோம். சிறந்த வீரர்கள் இங்கு இருக்கின்றார்கள். கடற்கரைவொலிவோள் விளையாட்டை இக்பிரதேசத்தில் அறிமுகப்படுத்தி பிரபல்ப்படுத்துவதற்கு நான் எதிர்பார்க்கின்றேன். எதிர்காலத்தில் ஒலிம்பிக் பதக்கத்தை வெல்லக்கூடிய கடற்கரை வொலிவோள் விளையாட்டை வெல்லலாம் என நினைக்கின்றேன். அப்போது மட்டக்களப்பைச் சேர்ந்த இளைஞர்களும் அதில் இணைந்திரப்பார்கள் என நான் நினைக்கின்றேன். அந்த சந்தர்பத்தை இளைஞர்கள் பயன்படுத்திக் கொள்ளுங்கள்.

இராஜாங்க அமைச்சர் சதாசிவம் வியேழேந்திரன், மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் கே.கருணாகரன், மண்முனை தென் எருவில் பற்று பிரதேச செயலாளர் திருமதி சிவப்பிரியா வில்வரெத்தினம், ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன கட்சியின் மாவட்ட அமைப்பாளர் பரமசிவம் சந்திரகுமார், தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் பொதுச் செயலாளர் பூ.பிரசாந்தன், விளையாட்டுக்கழக உறுப்பினர்கள், பொதுமக்கள், உள்ளிட்ட பலர் இதன் போது கலந்து கொண்டிருந்தனர்.

# நற்பிட்டிமுனையில் சமூர்த்தி பயனாளிகளுக்கு பசுவும் கன்றும் வழங்கிவைப்பு



(ஏ.எல்.எம்.ஷினாஸ்)

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்சஅவர்களின் எண்ணக்கருவிற்கு அமைய உள்ளூர் பொருளாதாரத்தை ஊக்குவிக்கும் 'சௌபாக்கிய' தேசிய வேலைத்திட்டம் சமூர்த்தி திணைக்களத்தின் ஊடாக தற்போது நாடு பூராகவும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

கல்முனை பிரதேச செயலகத்தின் கீழ் உள்ள நற்பிட்டிமுனை பிரதேசத்தில் தெரிவுசெய்யப்பட்ட சமூர்த்தி உதவி பெறும் குடும்பங்களுக்கு அவர்களின் வாழ்வாதாரத்தை உயர்த்துவதற்காக கறவை இன பசு மாடுகளை வழங்கி வைக்கும் நிகழ்வு நேற்று மருதமுனை மற்றும் நற்பிட்டிமுனை சமூர்த்தி வங்கி முகாமையாளர் சட்டத்தரணி எம்.எம்.முபீன் தலைமையில் நடைபெற்றது.

பிரதேச செயலாளர் ஜெ.லியாகத் அலி, சமூர்த்தி தலைமை பீட முகாமையாளர் ஏ.ஆர்.எம்.சாலிஹ் உட்பட சமூர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டு பயனாளிகளுக்கு பசுக்களை வழங்கி வைத்தார்.




# மட்டக்களப்பு காத்தான்குடி ஆதார வைத்தியசாலை சிற்றூழியர்கள் ஆர்ப்பாட்டம்

**(ஜவ்பர்கான்)**



சம்பள அதிகரிப்பு உட்பட பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து காத்தான்குடி ஆதார வைத்தியசாலைக்கு முன்பாக ஒன்று கூடிய வைத்தியசாலையின் சிற்றூழியர்கள் பதாதைகளை ஏந்திய வாறு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

பொது நிருவாக சுற்றறிக்கையின் படி அனைத்து சுகாதார ஊழியர்களுக்கும் விசேட விடுமுறை வழங்க வேண்டும் கடமைக்கு சமூகமளிக்காத இடையூறுகள் உள்ள சுகாதார ஊழியர்களுக்கு அருகிலுள்ள வைத்தியசாலைகள் அல்லது பைத்திய நிலையங்களில் கடமையாற்றுவதற்கு வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தல் சம்பள அதிகரிப்பு போன்ற பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து இல் ஆர்ப்பாட்டத்தில் இவர்கள் ஈடுபட்டனர்.இதன் போதுமஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் சுலோகங்களை எழுதப்பட்ட பதாகைகளையும் தாங்கியிருந்தனர்.

# லாகுகல பிரதேச செயலாளராக நவநீதராஜா கடமையை பொறுப்பேற்றார்



**(ஏ.எல்.எம்.ஷினாஸ்)**

அம்பாறை மாவட்டத்தின் நாவிதன்வெளி பிரதேச செயலகத்தில் உதவி பிரதேச செயலாளராக கடமையாற்றிய துறைநீலாவணையை சேர்ந்த என்.நவநீதராஜா லாகுகல பிரதேச செயலாளராக கடமையை பொறுப்பேற்றுக்கொண்டார்.

இதற்கு முன்னர் லாகுகல பிரதேச செயலாளராக கடமையாற்றிய சந்தருவான் அனுருத்த அம்பாறை பிரதேச செயலாளராக அண்மையில் இடமாற்றம் பெற்று சென்றதால் ஏற்பட்ட வெற்றிடத்திற்கு இவர் நியமிக்கப்பட்டுள்ளார்.இவர் இதற்கு முன்னர் லாகுகல பிரதேச செயலகத்தில் பதில் பிரதேச செயலாளராகவும் நாவிதன்வெளி பிரதேச செயலக உதவி பிரதேச செயலாளராகவும் கடமையாற்றி வந்த நிலையிலேயே தற்போது இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளது.கடமையை பொறுப்பேற்கும் நிகழ்வில் நாவிதன்வெளி பிரதேச செயலாளர் எஸ். ரங்கநாதன், முன்னாள் லாகுகல பிரதேச செயலாளர் உட்பட முக்கியஸ்தர்கள் கலந்து கொண்டனர்.

# மட்டக்களப்பு மாநகர ஆணையாளருக்கு எதிராக நீதிமன்ற அவமதிப்பு வழக்கு: பத்து இலட்சம் சரீரப் பிணையில் செல்ல அனுமதி

மட்டக்களப்பு மாநகர சபையால் ஆணையாளர் எம்.தயாபரனிற்கு கையளிக்கப்பட்டிருந்த பத்து வகையான அதிகாரங்களை மாநகரசபையின் மற்றுமொரு தீர்மானத்தின் மூலம் வேறு உத்தியோகத்தர்களுக்கு கையளிக்கப்பட்டிருந்தது.

இருந்தும் குறித்த அதிகாரங்களை ஆணையாளர் தொடர்ந்தும் பயன்படுத்தியதனால், மாநகர முதல்வர் தியாகராஜா சரவணபவனால் மாநகர ஆணையாளருக்கு எதிராக மட்டக்களப்பு மாகாண மேல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட எழுத்தாணை (Writ) வழக்கில் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரனால் செய்யப்பட்ட சமர்ப்பணங்கள் அடிப்படையில் 01.04.2021ஆம் திகதி நீதிமன்றத்தினால் கட்டளையொன்று வழங்கப்பட்டிருந்தது. குறித்த கட்டளையில், பத்து வகையான அதிகாரங்களையும் மறு அறிவித்தல் வரை ஆணையாளர் பயன்படுத்துவதற்கு தடை விதிக்கப்பட்டிருந்தது.

ஆனால் மாநகர ஆணையாளர் பல சந்தர்ப்பங்களில் மீறுகின்ற விதத்தில் செயற்பட்டமையினால் இச்செயற்பாடானது நீதிமன்றத்தினை அவமதிப்பமாகத் தெரிவித்து மாநகர முதல்வரினால், ஆணையாளருக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட நீதிமன்ற அவமதிப்பு வழக்கானது கடந்த மாதம் 19ஆம் திகதி ஆதரிப்புக்காக எடுத்துக்கொள்ளப்பட்டபோது மாநகர முதல்வர்சார்ப்பில் தோன்றிய சிரேஷ்ட சட்டத்தரணி கலாநிதி யு.எல்.அலி சக்கி, சட்டத்தரணிகளான ஏ.எல்.ஆஸாத் மற்றும் என்.கமலதாசன் ஆகியோரால் செய்யப்பட்ட சமர்ப்பணங்களின் அடிப்படையில் மாநகர ஆணையாளரை 13.09.2021ஆம் திகதி மன்றில் தோன்றுமாறு அழைப்பாணை அனுப்ப மாகாண மேல் நீதிமன்றம் கட்டளையாக்கிருந்தது.



குறித்த நீதிமன்ற அழைப்பாணையை மாநர ஆணையாளரிடம் சேர்ப்பிப்பதற்காக நீதிமன்ற பிஸ்கால் மேற்கொண்ட முயற்சிகள் பயனளிக்கவில்லை. இதனால் குறித்த வழக்கானது கடந்த 15ஆம் திகதி அழைக்கப்பட்ட போது, மாநகர ஆணையாளரை 23.09.2021ஆம் திகதி மன்றில் தோன்றுமாறு பொலிஸாரூடாக மீண்டும் அழைப்பாணை அனுப்ப மேல் நீதிமன்றம் கட்டளையாக்கிருந்தது.

குறித்த வழக்கானது நேற்று (23) எடுத்துக் கொள்ளப்பட்டபோது மாநகர முதல்வர் சார்ப்பில் சட்டத்தரணி ஏ.எல்.ஆஸாத் அவர்கள் தோன்றியிருந்ததுடன், ஆணையாளர் தனது சட்டத்தரணி மூலம் நீதிமன்றத்தில் தோன்றியிருந்தார். கௌரவ மாகாண மேல் நீதிமன்ற நீதிபதி என்.எம்.எம்.அப்துல்லாஹ் அவர்களினால் பத்து இலட்சம் ரூபாய் சரீரப் பிணையில் செல்வதற்கு ஆணையாளர் அனுமதிக்கப்பட்டிருந்ததுடன், குறித்த வழக்கானது எதிர்வரும் 11.10.2021ஆம் திகதி மீண்டும் அழைக்கப்படவுள்ளது.

# கல்முனையில் சமுர்த்தி குடும்பங்களின் வாழ்வாதாரத்தை ஊக்குவிக்கும் வேலைத் திட்டம்

**(எம். என். எம். அப்ராஸ்)**

சமுர்த்தி திணைக்களத்தின் ஏற்பாட்டில் சௌபாக்கிய தேசிய வாரத்தை முன்னிட்டு சமுர்த்தி குடும்பங்களின் வாழ்வாதாரத்தை ஊக்குவிக்கும் வேலைத் திட்டங்கள்நாடளாவிய ரீதியில் முன்னெடுக்கப்படுகின்றது

இதற்கமைய கல்முனை பிரதேச செயலக பிரிவில் உள்ள சமுர்த்தி உதவி பெறும் குடும்பங்களின் வாழ்வாதாரத்தை ஊக்குவிக்கும் முகமாக சௌபாக்கிய வேலைத் திட்டத்தின் ஆரம்ப நிகழ்வு இஸ்லாமாபாத் கிராம சேவகர் பிரிவில் நேற்று (23)இடம்பெற்றது

இதன் போது வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் முகமாக கரவை பசுக்கள் மற்றும் சமுர்த்தி சீட்டிலுப்பில் வெற்றி பெற்றவர்களுக்கான வீடமைப்புக்கான காசோலைகள் என்பன வழங்கி வைக்கப்பட்டது.

கல்முனை பிரதேச செயலக சமுர்த்தி தலைமை பீட சிரேஷ்ட முகாமையாளர் எ. ஆர். எம். சாலிஹ் தலைமையில் இடம் பெற்ற நிகழ்வில் கல்முனை பிரதேச செயலாளர் ஜே . லியாகத்அலி, கருத்திட்ட முகாமையாளர் ஏ.எம்.எஸ்.நயீமா, கல்முனைக்குடி சமூர்த்தி வங்கி வலய முகாமையாளர் மோசஸ் புவிராஜ்,வலய உதவி முகாமையாளர்எஸ் . எல் .அசீஸ்,சமுர்த்தி சமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் என்.எம். நௌசாத்,திட்ட உதவியாளர் ஏ.எஸ். எம்.ஜௌபர்,சமூர்த்தி உத்தியோகத்தர் ஐ. எல். அர்ஸதீன் ஆகியோர் கலந்து கொண்டு பயானாளர்களுக்கான வாழ்வாதார வேலைத்திட்டத்தினை முன்னெடுத்தனர்.

# கண்ணகி வித்தியாலயத்தின் மதில்கள் அழகிய சுவரோவியங்களால் அழகுபடுத்தப்பட்டு திறந்து வைப்பு





**(வி.சுகிர்தகுமார்)**

பாடசாலைகளின் மதில்களில் விழிப்புணர்வு ஓவியங்களை வரைந்து அழகுபடுத்தும் செயற்பாடுகள் திருக்கோவில் கல்வி வலயத்திற்குட்பட்ட ஆலையடிவேம்பு கல்வி கோட்டத்திலும்; இடம்பெற்று வருகின்றது.

இதற்கமைவாக கண்ணகி கிராமம் கண்ணகி வித்தியாலயத்தின் மதில்களும் அழகிய சுவரோவியங்களால் அழகுபடுத்தப்பட்டு இன்று திறந்து வைக்கப்பட்டன.

பாடசாலையின் அதிபர் ரி.இராசநாதன் தலைமையில் இடம்பெற்ற சுவரோவிய திறப்பு திறப்பு விழாவில் வலயக்கல்விப் பணிப்பாளர் யோ. ஜெயச்சந்திரன் கலந்து கொண்டு ஓவியங்களை திரை நீக்கம் செய்து வைத்தார்.

அக்கரைப்பற்று கோளாவில் 1 ஐ சேர்ந்தவரும் பிரித்தானியாவில் வசிப்பவருமான 'சத்தியம்' அமைப்பின் ஸ்தபாகரும் இயக்குனருமான கணேசபிள்ளை சத்தியமூர்த்தியின் முழுமையான பங்களிப்போடு வாழும் போதே வழங்கிடுவோம் எனும் கருப்பொருளுக்கு அமைவான நிதிப்பங்களிப்புடன் குறித்த ஓவியங்கள் வரையப்பட்டது.

கருத்தாளம் மிக்க குறித்த அழகிய ஓவியங்களை பாடசாலையின் சித்திரப்பாட ஆசிரியரும் சிறந்த ஓவியருமான ரி.சந்திரகுமார் தனது அர்ப்பணிப்பான சேவை மூலம் வரைந்துள்ளார்.

இந்நிலையில் ஓவியங்களை வரைவதற்கு நிதிப்பங்களிப்பு வழங்கியவர் மற்றும் சித்திரங்களை வரைந்தவர் உள்ளிட்ட அனைவருக்கும் பாடசாலை அதிபர் நன்றியினையும் பாராட்டினையும் தெரிவித்துக்கொண்டார்.

இதேநேரம் கருத்தாளமிக்க விழிப்பூட்டல் சித்திரங்களை வரைந்து பாடசாலை மதில்களை அழகுபடுத்திய பாடசாலை அதிபர் உள்ளிட்;ட கல்வி சமூகத்தை வலயக்கல்விப்பணிப்பாளர் பாராட்டினார்.

# 20 வயதுக்கு மேற்பட்ட விசேட தேவையுடையோர்களுக்கு தடுப்பூசி

**( எம்.ஐ.எம்.றியாஸ்)**

20 வயதுக்கு மேற்பட்ட விசேட தேவையுடையோர் மற்றும் ஏனைய நோய் உள்ளவர்களுக்கு சைனோம் தடுப்பூசி ஏற்றும் பணிகள் நடைபெற்று வருவதாக அட்டாளைச்சேனை பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி டொக்டர் எஸ்.அகிலன் நேற்று (23) தெரிவித்தார்.

அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலையில் ற்கென பிரிதொரு நிலையம் தயார் செய்யப்பட்டு நேற்று முன்தினம் (22) முதல் கொவிட் 19 சைனோபாம் தடுப்பூசி ஏற்றும் பணிகள் நடைபெற்றன.

அட்டாளைச்சேனை மற்றும் ஆலையடிவேம்பு பிரதேச சுகாதார எல்லைப் பிரிவுகளில் உள்ள 20 வயதுக்கு மேற்பட்ட விசேட தேவையுடையோர் மற்றும் ஏனைய நோய் உள்ளவர்களுக்கு முதல் தடவை அல்லது இரண்டாவது தடவைக்கான சைனோம் தடுப்பூசிகள் குறிப்பிட்ட நபர்களுக்கு பரிசோதனைகள் மேற் கொள்ளப்பட்ட பின் ஏற்றப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

20 வயதுக்கு மேற்பட்ட அனைவரும் உங்களது தடுப்பூசி ஏற்றும் மையங்களுக்குச் சென்று கொவிட் 19 தடுப்பூசியினை ஏற்றிக் கொள்ளுமாறு பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி டொக்டர் எஸ்.அகிலன் இதன் போது கேட்டுக் கொண்டார்.

# இளம் பெண் துஷ்பிரயோகம் சந்தேக நபர் விளக்கமறியலில்

**(எப்.முபாரக் )**

திருகோணமலை கந்தளாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் இளம் பெண்ணொருவரை துஷ்பிரயோகத்திற்குட்படுத்திய நபர் ஒருவரை அடுத்த மாதம் 4 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு கந்தளாய் நீதிமன்ற நீதிவான் விசானி தேனவது உத்தரவிட்டார்.

லைட் வீதி,கந்தளாய் பகுதியைச் சேர்ந்த 23 வயதுடைய இளைஞர் ஒருவரே விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

சந்தேக நபர் கந்தளாய் பகுதியிலுள்ள திருமணமான பெண்ணொருவரை கணவன் இல்லாத சந்தர்ப்பத்தில் இளம் பெண்ணை சந்தேக நபர் துஷ்பிரயோகத்திற்குட்படுத்தியதாக தெரிவித்து கணவனால் கந்தளாய் பொலிஸ் நிலையத்தில் மேற்கொண்ட முறைப்பாட்டை அடுத்து பொலிஸார் சந்தேக நபரை கைது செய்து கந்தளாய் நீதிமன்ற நீதிவான் முன்னிலையில் ஆஜர்படுத்திய போதே விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார்.

பாதிக்கப்பட்ட இளம் பெண் வைத்திய பரிசோதனைக்காக கந்தளாய் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

# தாய்ப்பாலை குளிருட்டியில் வைத்து குழந்தைக்கு கொடுக்கலாமா?

## விளக்குகிறார் விசேட குழந்தை நல வைத்திய நிபுணர்



**(காரைதீவு நிருபர்)**

தாய்ப்பாலை குளிருட்டியில் வைத்து குழந்தைக்கு கொடுக்கலாமா? என்ற கேள்வி எழுகின்றது. ஆம். அப்படிக்கொடுக்கலாம் என்று கிழக்கு பல்கலைக்கழக மருத்துவ பீட சிரேஸ்ட விரிவுரையாளரும் இமட்.போதனா வைத்தியசாலையின் விசேட குழந்தை நல வைத்திய நிபுணருமான டாக்டர் விஜி திருக்குமார் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்:

நீங்கள் உங்களது தாய்ப்பாலை பீய்ச்சி எடுத்து அதை நீங்கள் 6-8 மணித்தியாலங்கள் வெளியில் வைக்கலாம். அதாவது சூழல் வெப்பநிலையில் வைத்து பிள்ளைக்கு ஊட்டலாம். தவறும் பட்சத்தில் அதே பாலை குளிரூட்டியின் கதவில் (refrigerator door) வைத்து 24 மணி நேரம் வைக்கலாம். மேலும் இன்னும் பல மணிநேரம் குளிரூட்டியில் வைக்க தேவைப்படின், குளிரூட்டியின் ஆழ்உறைப்பகுதியில் (deep freezer) 6 மாதம் வரை பாதுகாப்பாக வைக்கலாம்.

குளிரூட்டியிலுள்ள போத்தலில் உள்ள பாலை குழந்தைக்கு கொடுக்கும் நேரம், சற்று சுடுநீரில் பால்போத்தலை வைக்கும் நேரம், அந்தப் பால் மெதுவாக கரைந்து வரும். ஏற்ற அளவு, பிள்ளைக்குக் கொடுக்கலாம்.

இது குறிப்பாக முலை தட்டையாக உள்ளவர்களுக்கும், தாய்ப்பால் கொடுக்க முடியாது என்பவர்களுக்கும், வேலைக்கு செல்லும் தாய்மாருக்கும் ஒரு ஆலோசனை. இனி வரும் காலங்களில், குழந்தைகளுக்குரிய புட்டிப்பால் இறக்குமதி தடை செய்யப்பட்டுள்ளதால், இனி தாய்ப்பால் கொடுக்கும் சந்தர்ப்பங்கள் கூடுதலாக இருக்கும். அப்படிப்பட்ட நிலையில் மேற்படி தாய்ப்பால் ஊட்டும் செயற்பாட்டினை, செய்தியினை நான் விரும்புகிறேன்.

நீங்கள் தாய்ப்பாலை பிசுக்கி எடுக்கும் முறையை உங்கள் குடும்ப சுகாதார அதிகாரி சுகாதார தாதி (mid wife) போன்றவர்களுடன் தனிப்பட்ட உரையாடலின் மூலம் பெற முடியும். காரணம் தொலைபேசியினூடாக ஆலோசனையினை வழங்க முடியாத சூழ்நிலை காரணமாகவும் மற்றும் நேரடியாகக் காட்டி தர வேண்டும் என்பதாலும் மேற் கொண்ட சுகாதார அதிகாரியின் ஆலோசனை நாடவும்.